Registered No. M. 878.

பூர்ணசந்திரோதயம்.

A Tamil Monthly Journal

Devoted to Theosophy, Religion, Science, Art and Civilization

தொகுதி 5	1914௵ டிசம்பர்மீ 15௳ ஆனந்த௵ மார்கழிமீ 1௳	பகுதி 8

அ. ரங்கஸ்வாமி ஐயர், B.A., B.L., F.T.S. பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2.   தனிப்பிரதி அண 4.

மதுரை:

விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

பொருளடக்கம்.

CONTENTS.

பக்கம்.

1. தற்கால நிலைமை—அ. ரங்கஸ்வாமி ஐயர். 281
From the Editor—A. Rangaswamy Iyer.

2. யுத்தத்தைப் பற்றிய முன் அறிவிப்பு—ஆத்தங்குடி M. ஸ்வாமிநாதையர். 288
Forecast of the War-Attangudy M. Swaminathier.

3. வருங்கால லக்ஷ்யங்கள்—ஸ்வாதந்திரியம்—Mrs. அன்னிபெஸண்டு 293
Ideals of the Future—Liberty-Mrs. Annie Besant.

4. கலைஞானத்தின் தற்கால தசை—B. S. ராமசுப்பையர் 296
The Place of Art in Modern Life—B. S. Ramasubbier.

5. பரோபகாரம்—நடுக்காவேரி மு. வேங்கடசாமி நாட்டார். 301
Help Others—Nadukkaveri M. Venkatasamy Nattar.

6. அவதாரங்கள்—கே. கோடீசுவர ஐயர். 305
Avatars—K. Kotiswara Iyer.

7. சிறுவர்க்குரிய விஷயம்—வஸந்தானந்தர் 312
Children's Corner—Vasanthananda

8. பத்திரிகை வரவு.
Review of Papers.

9. புஸ்தக வரவு.
Review of Books.

10. சமாசாரம்.
News.

(8–10) ஸேவாநந்தர். Sevananda. 320

Ready for Sale.

The English Translations of:—

Thirty Minor Upanishads Rs. 3-8-0

Laghu Yoga Vasishta Rs. 2-0-0

Professor Bergson & the Hindu Vedanta. Rs. 0-4-0

without postage.

The above Upanishads, except one or two have never before been published in a book-form. Please apply to:—

K. Narayanasamy Iyer Esq.

Theosophical Society, Adyar, Madras.

272



Photo by Trilokekar & Kirtikar.

RECEPTION OF Mrs. ANNIE BESANT, P. T. S., AT BOMBAY, ON 10th JULY 1914.



THE ALL-INDIA T. S. ADDRESS TO MRS. BESANT.

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 6 | 1914௵ டிசம்பர்௴ 15௳ ஆனந்த௵ மார்கழி௴ 1௳ | பகுதி 8

தற்கால நிலைமை.

பிரஹ்மஞான கிரந்தங்களில் விகாஸமுறை (The process of Evolution) என்னும் பதம், பற்பல விடங்களில் உபயோகிக்கப் பட்டிருக்கின்றது. அது உலகத்தில் நூதனமாக தற்காலத்தில் வெளியிடப்பட்ட தத்துவமல்ல. அது பூர்வத்தில், ஹிந்துக்களுடைய ஷட்தரிசநம் என்ற ஆறு சாஸ்திரங்களில் ஒன்றாகிய கபிலருடைய ஸாங்கிய சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது.; கிரீஸ் தேசத்து தத்துவசாஸ்திரிகள் சிலரால் கைக்கொள்ளப்பட்டது. நவீன பௌதிக சாஸ்திரங்களின் ஆராய்ச்சியில் தேர்ந்த டார்வின், ஸ்பென்ஸர் முதலிய மேற்றிசைப் பண்டிதர்கள் ஐம்புலன்களால் அறியக்கூடிய பௌதிக விஷயங்களை விகாஸ முறையினால் விளக்கியிருக்கின்றனர். ஸ்தூல ஸூக்ஷ்ம உலகங்களிலுள்ள ஸகல ஜீவர்களும் அவ்விகாஸமுறையைத் தழுவியே மேற் செல்கின்றனவென்றும், எல்லா சராசரங்களும் அம்முறையை யநுஸரித்தே நிகழ்கின்றனவென்றும் பிரஹ்மஞான கிரந்தங்கள் வற்புறுத்திக் கூறுகின்றன.

*
* *

ஒரு ஜீவனுடைய விகாஸமுறையானது இருவகையாகப் பிரிக்கப்படும். முற்பாதிக்குப் பிரவிர்த்தி மார்க்கமென்று பெயர். பிற்பாதிக்கு நிவிர்த்தி மார்க்கமென்று பெயர். பிரவிர்த்தி மார்க்கத்தில் ஜீவன் பிரகிருதியிற் புகுந்து, வரிசைக்கிரமமாக, கநிஜவர்க்கம், ஸ்தாவர வர்க்கம், பிராணி வர்க்கம், மானிடவர்க்கங்களில் சரீரங்களை யடைந்து, அவ்வர்க்கங்களில் நிகழும் அநுபவங்களால் ஏற்படும் சக்திகளைக் கைக்கொண்டு அவைகளின் மூலமாய் ஜீவனின் முக்குணங்களாகிய, ஞானம், பக்தி, கிரியை அபிவிருத்தியடைந்து, நிவிர்த்தி மார்க்கத்தை நெருங்கிச் செல்லுகிறான். பிரவிர்த்தி மார்க்கத்தில் ஜீவனுடைய சக்திகள் அவனுடைய சுயலாபத்தையே நாடிச் செல்லுகின்றன. மற்ற ஜீவர்களைக்காட்டிலும் தான் வேறு என்று நினைத்து, தன் உடைமையிலிருந்து அவர்களுக்குக் கொடுப்பின் தனக்கு நஷ்டமென்று நினைக்கின்றான். பிரவிர்த்தி மார்க்கத்தில் கைக்கொள்ளும் ஞானம் விவேகத்தை விருத்திசெய்கிற கல்வி முதலியனவாகும். அம்மார்க்கத்தில் வளரும் பக்தியானது குடும்பம், மித்திரர், ஜாதி, தேசம் முதலிய விஷயங்களில் ஏற்படும் பிரேமைரூபமான அபிமானமும் தனது யோகக்ஷேமத்தைக் கருதி ஈசுவரனிடத்தில் கைம்மாற்றை எதிர்பார்க்கின்ற விசுவாஸமுமேயாகும். அம்மார்க்கத்தில் செய்யும் கிரியையும் தனது ஸம்பத்து, கீர்த்தி முதலியவைகளைக் கருதியே பிரவிர்த்திக்கும் முயற்சிகளாக முடியும்

***

அநேக ஜன்மங்களாக மேல்நோக்கிச் செல்லும் ஜீவர்களின் விகாஸமுறையை ஆராய்ந்து பார்க்குங்கால், கொஞ்சதூரம் மெல்ல மெல்ல, மேல்நோக்கிச் சென்று ஒரு ஸ்தானத்தை அடைந்தவுடன் நாம் ஒரு படியில் கால்வைத்து திடீரென்று மேலேறிச் செல்வதுபோல் விகாஸமுறையில் ஒரு படியேறி, மறுபடியும் மெல்ல மெல்லப் போய் மறுபடியும் மற்றொரு படியேறி அதின்பிறகு மெல்லச் செல்வதும் இவ்விதமாக மாறிமாறி மெதுவாகச் செல்வதும் திடீரென்று மேற்போவதும், அம்முறையின் இயற்கையென்றே நாம் சொல்லத் துணியலாம். பெரியோர்களுடைய ஸாந்நித்தியத்தாலும் வாழ்நாட்களில் ஏற்படும் கஷ்டநஷ்டங்களாலும் விவேகமானது

சிற்சில சமயங்களில் தெளிவையடைந்து ஜீவனை விகாஸமுறையில் ஒரு படியிலிருந்து அதற்கு மேற்படியில் உயர்த்திவைக்கின்றது.

* * *

ஒவ்வொரு பிரத்யேகமான ஜீவனுக்கும் விகாஸமுறையானது ஒரு மார்க்கத்தை யேற்படுத்துவதுபோலவே, மநுஷ்ய வர்க்கம் முழுமைக்குமே ஸமஷ்டியாக விகாஸமுறையானது ஒரு மார்க்கத்தை யேற்படுத்தி, அவ்வழியே மநுஷ்ய வர்க்கத்தை நடாத்துகின்றது. இப்புவியில் இக்கல்பத்தில் (In this Globe in this Round) விகாஸமுறையில் நான்குவித மானிட வர்க்கங்கள் இதற்கு முன் ஒன்றின் பின் ஒன்றாகத் தோன்றி உன்னத பதவியையடைந்து, ஐந்தாவதான ஆரியர்கள் தற்காலத்தில் மானிடவர்க்கத்தின் தலைமையைப் பூண்டு, அவர்களுடைய நாகரிகம், அறிவு, முயற்சி முதலிய குணங்களால் உலகில் முதன்மையை யடைந்திருக்கிறார்கள். மனித வர்க்கம் ஆதியில் தோன்றிய முதல் இரண்டு வகுப்பினர்கள் மறைந்துவிட்டனர். அவர்களுடைய சரீரம் தற்கால மநுஷ்யர்களுடைய சரீரத்தைக்காட்டிலும் ஸூக்ஷ்மமான பிரகிருதி திரவியத்தாலமைந்தது: முதல் ஜாதியார், நமது உலகத்தின் கடலும் கரையும் இப்போதிய அமைப்பைக்காட்டிலும் வேறாய் அமைக்கப்பட்டு, நம்முடைய புராணாதிகளில் சிற்சில விடங்களில் கூறப்பட்டுள்ள ஜம்பூத்வீபமாயிருந்த காலத்தில் பிரக்யாதி பெற்றனர். இரண்டாவது ஜாதியார், உலகத்தில் கல்பாந்த பிரளயத்தால் மாறுதல் தோன்றி, அது பிலக்ஷத்வீபமாக மாறினபிறகு, அதில் தோன்றி பிரக்யாதியடைந்தனர். மூன்றாவது ஜாதியார் அவ்வுலகு சால்மலீத்வீபமாக மாறின பிறகு, அதில், புராணங்களில் கூறப்படும் தானவர்களாகச் செழித்தோங்கினர். அவர்களைச் சேர்ந்தவர்கள்தான் ஆஸ்டிரேலியா, தென் ஆபிரிக்கா முதலிய தேசங்களில் வஸிக்கும் பூர்வ ஜாதியார். அத்துவீபமானது கீழ்ப்பஸிபிக் மஹாஸமுத்திரத்திலிருந்து தென் அட்லாண்டிக் மஹா சமுத்திரம்வரை பரவிற்று. நான்காவது ஜாதியார் தோன்றும்போது, உலகம் இப்போது அட்லாண்டிக் மஹாசமுத்திரம் என்று சொல்லப்படுகிற நீர்ப்பெருக்கில் மூழ்கிப்போன குசத்வீபமாயிற்று. அத்துவீபம் ஜனஸமூகத்துடன் விளங்கின காலத்தில் தைத்யர்களாக அக்கண்டத்தில் தோன்றி

278

தலைமையைக் கைக்கொண்டனர். அந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள் தற்காலத்தில் மங்கோலியர்களென்று சொல்லப்படுகின்றனர். அவர்கள் சீனா, ஜப்பான், பர்மாமுதலிய தேசங்களில் வஸிக்கின்றார்கள்.

***

உலகம் கிரௌஞ்சத்வீபமாக மாறி நின்றபின் ஐந்தாவது வகுப்பைச்சேர்ந்த ஆரியர்கள் தோன்றினார்கள். அவர்களில் இதுவரை நான்கு உள்வகுப்புகள் தோன்றியிருக்கின்றன. முதலாவது உள்வகுப்பினர் இந்துதேசத்திற் புகுந்து ஹிந்துக்களின் முன்னோர்களானார்கள். அவர்களுடைய முக்கிய குணவிசேஷம் தர்மத்தைக் கைக்கொள்வதேயாகும். தர்மம் இப்போது ஸாதாரணமாக வழங்கப்பெறுவதுபோல் தானம் என்று மாத்திரம் பொருள் கொண்டதல்ல. தர்மம் என்பதற்குக் கடமையென்று தாத்பரியம். ஒரு ஜீவனுக்குத் தன்னைக்காட்டிலும் விகாஸமுறையில் மேல் நிலைமை யடைந்தவர்களிடத்திலும், தனக்கு ஸமானமானவர்களிடத்திலும், தன்னிலும் கீழோரிடத்திலும் நிறைவேற்றவேண்டிய கடமைகள் உள்ளன. எல்லா ஜீவர்களும் ஆதியில் ஈசுவரனிடத்திலிருந்து தோன்றினவர்களாகையாலும், அவர்கள் ஒருவரோடொருவர் ஸம்பந்தமில்லாமல் தனித்து நிற்றல் கூடாததாலும், ஒவ்வொரு ஜீவனும் விகாஸமுறையில் நிற்கும் நிலைமைக்குத் தக்கவாறு கடமைகளைப் பூண்டிருக்கின்றனர். ஆகையால் ஸநாதநதர்மம் என்ற ஹிந்துமதத்தில் தர்மத்திற்குப் பிராதாந்யம் ஏற்பட்டது. அதைக் கைக்கொண்டே மநுவானவர் ஜீவர்கள் விகாஸமுறையில் நிற்கும் நிலைமையை ஆதாரமாக வைத்து வெவ்வேறு தர்மத்துடன் கூடிய நான்கு வருணங்களையும், அந்த ஜீவர்கள் ஒரு ஜன்மத்தில் ஒன்றின்பின் ஒன்றாகக் கைக்கொள்ளவேண்டிய நான்கு ஆசிரமங்களையும் ஏற்படுத்தினர்.

***

தவிரவும் தேவர்களுக்கும், பிதுர்க்களுக்கும், ரிஷிகளுக்கும், மனிதர்களுக்கும், பூதங்களுக்கும் செலுத்தவேண்டிய கடன்களாகிய பஞ்சயக்ஞங்களும் ஹிந்துமதத்தில் விதிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ஜீவனும் அவனவனுடைய அந்தரங்க பரிவத்துக்குத்

திக்கவாறு ஈசுவரனையடைய ஞான பக்தி கர்ம மார்க்கங்கள் அம்மதத்தில் காட்டப்பட்டிருக்கின்றன. அவ்வழிகளாற்சென்று பற்பல ஸ்தானங்களையடைந்து அப்பால் ஜீவன்முக்தி பதவியை யடையவும் அவ்வழிகளின் விசேஷகுணங்களும், ஹிந்துமத கிரந்தங்களில் கூறப்பட்டிருக்கின்றன. இவ்விதமாக ஸநாதந தர்மமானது, வாழ்நாளின் கடமைகள் ஒழுங்காயும் விவரமாயும் வரையப்பட்டிருக்கும் ஒரு படம்போன்ற சித்தாந்தமாகும்.

***

ஐந்தாவது ஜாதியாரின் இரண்டாவது உள்வகுப்பினர் அரேபியா, எகிப்து முதலிய தேசங்களிற் சென்று ஈசுவரனை ஜ்யோதிஸ் ரூபமாக ஆராதனைசெய்து, பௌதிகசாஸ்திர ஆராய்ச்சியைக் கைக்கொண்டனர். மூன்றாவது உள்வகுப்பினரோ, பிராசீன பாரசீகர்களாய் பாரஸீகதேசத்தில் குடியேறி,மநோ வாக்கு காய மென்ற திரிகரணங்களின் சுத்தியையே உத்தம கொள்கையென்று கைக்கொண்டனர். நான்காவது உள்வகுப்பினர், கிரேக் ரோம கெல்ட் ஜாதியார்கள் என பற்பல நாமங்களைத் தரித்து அழகொடு அமைந்த சங்கீதம், சித்திரம், கவநம் முதலிய கலைகளில் தேர்ச்சியடையக் கூடிய இயற்கையுடையவர்களாய் ஈசுவர ஸௌந்தர்யம் என்றதை ஸ்ருஷ்டியில் அறியக் கூடிய விசேஷகுணத்தால் சுந்தரமூர்த்தியாகிய ஈசுவரனையடையத் தக்கவர்கள்.

***

ஐந்தாவது உள் வகுப்பினராகிய டியூடன் ஜாதியைச் சேர்ந்த இங்கிலீஷ், ஜெர்மன், ஸ்காண்டிநேவியர் முதலியவர்கள் மநோபலத்தை அபிவிருத்திசெய்து, அதின் மூலமாய் சாஸ்திரங்களையும் யந்திரங்களையும் கண்டுபிடித்து, தற்காலத்தில் பிரபல்ய மடைந்திருக்கின்றார்கள். அந்த ஜாதியில் பிறக்கும் ஜீவனும் இதர ஜீவர்களைக் காட்டிலும் தான் பிரத்யேகமானவனென்று கருதி, தன்னுடைய வலிமைகளைத் தனக்காக உபயோகித்துக்கொள்ளும் சுபாவத்தை இயற்கையாக வுடையவன். இனிமீது தோன்றப் போகும் ஆறாவது உள் வகுப்பினரோ ஸஹோதராபாவத்தை முக்யமான

கொள்கையாகக் கைக்கொள்ளத்தக்கவர்· அவ்வகுப்பினர் தோன்றுங் கால் யுத்தமும் சச்சரவும் இப்பூமியில் நேரிடுவது துர்லபமாகும்.

***

மேற்சொல்லிய ஒவ்வொரு ஜாதியார்களும் அவரவர்கள் தோன்றும் காலத்தில், அவர்களிடத்தில் நூதனமான குணங்கள் பிரகாசிக்கும் வண்ணம், பயிற்சி செய்ய ஜகத்குரு என்னும் அதிகாரஸ்தானத்தை வகிக்கின்ற மஹரிஷியானவர் அந்தந்தக் காலத்தில் அவதரிக்கின்றார். முதலாவது உள்வகுப்பினராகிய ஹிந்துக்களுக்குள் அவர் வியாஸராகத் தோன்றினர். இரண்டாவது உள்வகுப்பினுக்குள் எகிப்து தேசத்தில் அவர் தாத் அல்லது ஹேர்மீஸ் என்று சொல்லப்படுகிறவராயும், மூன்றுவது உள்வகுப்பினருக்காக ஸாராதுஷ்டிரா வாக பாரஸீக தேசத்திலும், நான்காவது உள் வகுப்பினர் கடைத்தேற, ஆர்பியஸ் என்றவராய் கிரீஸ்தேசத்திலும் அவதரித்தும், ஐந்தாவது உள் வகுப்பினருக்காக கிறிஸ்துவாக அந்த ஜகத்குரு ஸ்தானத்தைத் தற்காலத்தில் வகிக்கின்றவர் யூத தேசத்தில் தோன்றியும், ஆறுவது உள்வகுப்பினருக்காக சமீபத்தில் அவ்வதிகாரம் வகிக்கிறவர் அவதரிக்கப் போகின்றனர். அந்த ஆறுவது உள் வகுப்பினர் உற்பத்தியாகும் காலமும், சமீபித்துக் கொண்டிருக்கிறது.

***

இவ்வாறு ஸமஷ்டியில் மானிடவர்க்கமும் ஒரு ஜீவனைப்போல் மெல்லமெல்ல விகாஸமுறையிற் சென்றுகொண்டு, மேற்சொல்லிய பரம புருஷர்கள் தோன்றுங்கால் அம்மார்க்கத்தில் ஒரு படி ஏறி மேற்செல்லுகின்றது. அவ்விதமாய் ஒரு படி ஏறுங்காலம் தற்காலம். ஆகையால் ஒவ்வொரு தேசத்திலும் பழைய ஏற்பாடுகள் மாறிப் புதிய ஏற்பாடுகள் ஸம்பவிக்கும்போல் தோன்றுகின்றன. இந்தியாவில் அவ்வித சின்னங்களை நாம் பார்க்கின்றோம். நாகரிகத்திலும் ராஜரீகத்திலும் மதம், ஆசாரம் முதலியவைகளிலும் அம்மாறுதல்களை நாம் காண்கிறோம். அவ்விதமாகவே ஐரோப்பிய தேசங்களிலும் அம்மாறுதல்கள் விரைவாகத் தோன்றி வருகின்றனவென்று தற்கால விருத்தாந்தங்களால் தெரிகிறது.

***

இம்மாறுதல்களை விரைவாக உண்டாக்குவதற்கு யுத்தம் போலத் தகுதியான கருவி யாதொன்றுமில்லை. ஈசுவர ஸங்கல்பத்தில் அவ்விதமான கருவியாகத் தற்கால யுத்தம் ஏற்பட்டிருக்கலாம். ஐந்தாவது ஜாதியாரான ஆரியர்களின் ஆறுவது உள்வகுப்பினர் தோன்றுமுன்னர் அவர்களுடைய முக்கிய லக்ஷணமாகிய ஸகோதர பாவத்தைப் பலப்படுத்துவதற்கு, யுத்தத்தைத் துர்பலமாகச் செய்யவேண்டுவது அவசியமாதலால், அம்முடிவை இந்த யுத்தமானது உண்டாக்குமென்று தோன்றுகின்றது.

* * *

நாளிது மீ 27-ம் தேதி முதல் 30-உமுடிய அடையாறு என்னுமிடத்தில் பிரஹ்மக்ஞான ஸபை கன்வென்ஷன் என்னும் மஹாஸதஸ் வழக்கம்போல் நடைபெறும். ஸ்ரீமான் ஸி. ஜினராஜதாஸர் அவர்கள் இந்த ஸதஸ்ஸில் பிரதான உபந்யாஸகர். அவர் உபந்யஸிக்கப் போகும் விஷயமாவது:—" பிரஹ்மக்ஞானதரிசனமும் தற்காலத்தியர்களின் நவீன அபிப்பிராயங்களும்" கன்வென்ஷன் போன்ற பெரிய கோஷ்டிகளுக்கு அடிக்கடி நாம் போனால் தான், பிரஹ்மக்ஞான ஸபையின் மஹத்துவத்தை உண்மையாக நிதானிக்கயியலுவோம். ஆகையால் இச்சந்தர்ப்பம் அநேகர் அடையாற்றுக்கு வரவேண்டுமாகக் கோரப்படுகிறது.

* * *

இந்த சஞ்சிகையின் முகப்பில் இரண்டு படங்கள் உள்ளன, முதலாவது படம், மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையார், 1914 ஷு முதல் 1921-ம்ஷுவரை இன்னொரு ஏழுவருஷங்கட்கு பிரஹ்மக்ஞான ஸபையின் அக்ராஸநாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற பிறகு, முதன்முதல் இந்தியா தேசத்திற்கு விஜயம் செய்தபோது பம்பாய் நகரில், பிரஹ்மக்ஞான ஸபையின் இந்திய மெம்பர்களால் உபசரிக்கப்பெற்ற தருணத்தையும், உடனே அம்மையவர்கள் நமக்கு ஹிதமொழிகூறியதையும், விளக்குகிறது. இரண்டாவது படம் அத்தருணத்தில் அம்மையாருக்கு அளிக்கப் பெற்ற நல்வரவுப் பத்திரிகையின் அழகிய சிறு உருவம். இவற்றை ஆகஸ்டுமீத்திலேயே நம் சந்தாதார்களுக்கு அளிக்க முயன்றும் இயலவில்லை, ஆயினும் இப்போதும் நம் சந்தாதார்கள் அவற்றைப் பார்க்க உத்ஸாஹம் கொள்வார்களென்பதில் ஐயமில்லை.

அ. ரங்கஸ்வாமி ஐயர்.

யுத்தத்தைப் பற்றிய முன் அறிவிப்பு.

"பயொனியர்" என்னும் பத்திரிகையை முன்பு நடத்திவந்தவரும், இந்தியாவில் பிரசித்தி அடைந்தவருமான A. P. சின்னெட் என்பவர், "வாஹன்" என்னும் பிரஹ்மக்ஞானப் பத்திரிகையில், அடியிற் கண்டவிதமாக எழுதியிருக்கிறார். நடந்த விஷயங்களின்னவென்று வாசிப்பவர்கள் தாங்களே அறிந்து கொள்ளும் பொருட்டு, அப்போதைக் கப்போது தனக்குக் கிடைத்த சமாசாரங்களைப் பற்றித் தாம் எழுதி வைத்திருந்த குறிப்புக்களை அப்படியே வெளியிட்டிருக்கிறார்.

" இப்போது நடந்து கொண்டிருக்கிற இச்சண்டையைப் பற்றி நீண்ட காலத்துக்குமுன் அதாவது 1911 ஹு ஆரம்பத்திலேயே ஒரு சந்தர்ப்பத்தில், நான் சிலவிஷயங்களை வெளியிட்டிருக்கிறேனென்பதை, பிரஹ்மக்ஞான சங்கத்தைச் சேர்ந்தவர்களாயுள்ள என்னுடைய சிநேகிதர்கள், நீண்டகாலமாயறிந்திருக்கிறார்கள். அதேவருஷம் மார்ச்சு மாதத்தில் நான் ஆசியா சங்கக் கட்டிடத்தில் ஒரு பெரிய கூட்டத்தார் முன்னிலையில் பிரசங்கம் செய்தபோது, அப்போதைக்கிரண்டொரு மாதத்துக்கு முன் எனக்குக் கிடைத்த, மேற்சொன்ன சமாசாரத்தை வெளிப் படுத்தியிருக்கிறேன், 1911ஹு ஜனவரி மாதத்தில் குறித்து வைத்திருந்த அவ்விஷயங்களை, பின்னிட்டு சமீபகாலத்தில் நான் சிலருக்குப் படித்துக் காட்டியபொழுது, அதை யெல்லோரும் அறியும்படி, வெளியிடவேண்டுமென்னும் அவர்கள் கோரிக்கைக் கேற்ப அவ்விஷயங்களை, நான் அப்போது குறித்து வைத்திருக்கிற படியே வெளியிடுகிறேன்."

"சூக்ஷ்ம உலகத்தின் கீழ்ப்பாகத்தில் ஒரு கனத்த சக்தியானது நெருங்கிச் சூழ்ந்து கொண்டிருக்கிறது. அது வெளித் தோன்றும் பொழுது இவ்வுலகத்தில் கட்டாயம் ஒரு பயங்கரமான காரியம் சம்பவிக்கும். ஆனால் குருநாதர்கள் அதனால் நேரிடக் கூடிய தீமைகளைக் கூடுமானவரை குறைப்பதற்கு முயற்சிசெய்துகொண்டிருக்கிறார்கள். இப்போது ஜெர்மானியர்களுடைய உத்தேசமானது ஹாலேண்டைக் கைப்பற்றுவதல்ல, ஆனால் பெல்ஜியத்தைத் தாக்குவதே. அதன் பயனாக ஐரோப்பா முழுவதும் சண்டை நடக்கும். அச்சண்டையில் ஜெர்மானியர்களும், ஆஸ்திரியர்களும், துருக்கிக்காரர்க

ளும் ஒன்று சேர்ந்து கிரேட் பிரிட்டென் ,(Great Britain) ருஷியா பிரான்சு, இத்தாலி ஆகிய இத்தேசத்தார்களை எதிர்ப்பார்கள்."

"ஜெர்மனி தேசத்தவர்களின் விரோதமெல்லாம் திரண்டு ஜெர்மன் சக்ரவர்த்தி யொருவரிடமே குடி கொண்டிருக்கிறது. ஆங்கில தேசத்திலுள்ள தன்பந்துக்கள் சிலரிடம் மாத்திரம் அவர் விசுவாசமுள்ளவராயிருக்கிறாரே யொழிய, அஜ்ஜர்தியர்களிடமே ஒரு கொடிய விரோதத்தைப் பாராட்டுகிறார். பிஸ்மார்க்கு என்பவன் தன்னை அறியாமலே ஜெர்மன் சக்ரவர்த்தியைச் சண்டைக்குத்தூண்டிக் கொண்டிருக்கிறார். அவர் வாயிலிருந்து வந்த வார்த்தைகளிற் சிலவற்றிற்கு சிலபூதங்களே காரணம். அதாவது அப்பூதங்கள் பிஸ்மார்க்கு என்பவரின் மூலமாகப் பேசின. அவருடைய இரண்டாவது குமாரனும் தகப்பனைப் போன்ற சுபாவமுள்ளவன். அப்பூதங்களே அவர்கள் இருவர் மூலமாகவும் வேலைசெய்கின்றன. கைஸரின் எண்ணமானது படையெடுத்துச் சென்று இங்கிலாந்தைத் தாக்கி அதைக் கைப்பற்றுவதே, அப்படி அதைக் கைப்பற்றின பிறகு தனக்கேற்பட்ட நஷ்டத்தை வாங்கிக் கொண்டு பிறகுநாட்டை அவர்கள் வசம்விட்டுவிடுவது அவர் எண்ணமல்ல. ஆங்கில ராஜாங்கத்தைச் சேர்ந்த சகலநாடுகளையும் தான் முடிபுனைந்துஅரசாள வேண்டும் என்னும் கருத்தைக் கொண்டிருக்கின்றார்."

"இப்பெரிய யுத்தமானது மித்திரர்களாகிய ஆங்கிலர், பிரான்சுக்காரர் பக்கமே ஜயத்துடன் முடிவாகி, கடைசியில் ஜெர்மானியர்கள் நாசமடைய வேண்டுமென்று ஏற்கனவே தீர்மானமாய்விட்டது. ஜெர்மானியர்கள் மிக்க துன்பத்துக்குள்ளாவார்கள். முடிவில் ஐரோப்பாவிலுள்ள பிரதேசங்களைப் பற்றிய ஒரு பெரிய பிரிவினையானது ஏற்படும். (அதாவது ஜயமடைந்தவர்கள் தோல்வி யுற்றவர்களின் நாட்டைப்பங்கிட்டுக் கொள்வார்கள்.) சண்டை நடக்கும் காலம் 1913வுடு ஆனல் அதற்கு முந்தியே ஒரு இராஜாங்கத்திற்கும் பற்றொரு இராஜாங்கத்துக்கும் மநஸ்தாபத்தை உண்டு பண்ணுகிற சம்பாஷணைகள் நடந்து கொண்டிருக்கும்."

"இக்கொடுமையை நிவர்த்திக்க ஸ்ரீ வெள்ளியம்பலத்தார்கள் (The White Lodge) தங்களால் கூடுமானவரை முயற்சி யெடுத்துக்

கொள்வார்களென்றும், ஆனல் அதன்மூலமாக சண்டை நின்றுபே குமென்று நினைக்க மார்க்கமில்லை யென்றும் எனக்குச் சொல்லப்பட்டது. உரோமன் இராஜாங்க காலமுதல் தொன்று தொட்டுவந்த, ஜனசமூகத்தின் ஸமஷ்டியான துஷ்கருமமானது, (National Karma) இவ்வித யுத்தத்தை யுண்டுபண்ண மேற்சொல்லிய பூதங்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்தது. உயிருடனிருக்கும் காலத்தில் இருந்ததைவிட சூக்ஷ்மவுலகத்தில் அதிக சக்தியோடிருக்கிற பிஸ்மார்க்கு என்பவர் ஜெர்மன் சக்கரவர்த்தியைப் பிடித்து ஆட்டிக்கொண் டிருந்ததோடு, ஐரோப்பாவின் மேல்பாகம் முழுவதும் ஜெர்மனியின் ஆளுகைக் குட்பட்டிருக்கவேண்டும் என்பது கடவுள் எண்ணம், என்பதாக அவருக்குச்சொல்லி, அவரை நம்பச் செய்திருக்கிறர். அவர் மனோபாவம் முழுவதையும் நான்அறிந்து கொள்ளும்படியான சந்தர்ப்பம் ஒன்று எனக்குக் கிடைத்தது.யுத்த முடிவில் ஜெர்மனி ஜயமடைந்ததுபோன்ற ஒருகாட்சியானது அவருக்குத் தோற்றுவிக்கப்பட்டது. ஜெர்மன் சக்கிரவர்த்தியை ஆட்டிக்கொண்டிருந்த மாயா சக்திக்காரர்கள்(Black Powers)இவ்விதம் சண்டைக்கு அவரைத்தூண்டிக்கொண்டிருந்தார்கள். இச்சண்டையில் ஆங்கிலதேசத்தார்கள் சேருவார்களென்பதையாவது, சமயம் நேரிடும்போது, பிரான்சும் இங்கிலாந்தும் தங்களுக்குள்ள வித்யாசங்களை விட்டுவிட்டு ஒன்று சேர்ந்துவிடு மென்பதையாவது அவர் சிறிதும் நினைக்கவேயில்லை."

"இச்சண்டையின் முடிவு இன்னதென்று முன்னமேயே தெரிந்து கொண்டிருக்கிறவரும், எனக்குஅதிகநம்பிக்கையுள்ளவருமான ஒருவர், கடைசியில் நம்முடைய தேசமும் (இங்கிலாந்தும்) பிரான்சுமே ஜயத்துடன் திரும்புமென்பதாக எனக்கு நம்பிக்கையான உறுதிமொழி கூறியிருக்கிறர்."

"1911ம் வருஷத்தில் எனக்கு இன்னம் சில அதிகமான சமாசாரங்கள் கிடைத்தன. அதைப்பற்றி என்னால் அடியிற்கண்ட விதமாக் குறித்து வைக்கப்பட்டிருக்கிறது."

"அமெரிக்கர்களுக்கு இச்சண்டை நேரிடுமென்பது முன்னமே தெரியும். ஆனல் அவர்கள் ஒருகட்சியிலும் சேராமல் பொதுவா

யிருப்பார்கள். சண்டை ஐரோப்பாவில் மட்டும்தான் நடக்கும். அத்தேசத்தி லுள்ளவர்கள் முழுமையும் அதில் சம்பந்தப்பட்டிருப்பார்கள். இந்தியாவிலும் சில தொந்தரவுகள் ஆரம்பமாகும், ஆனல் அவைகளைக் கிளம்பவொட்டாமல் தடுக்கத்தக்க ஏற்பாடுகள் செய்யப்படும். இந்தியாவிலுள்ள சைன்யங்களை, அவ்விடமிருந்து ஐரோப்பாவுக்குக் கொண்டுவருவது இங்கிலீஷ் காரர்களுக்குச் சாத்தியமாயிராது என்ற ஒருஎண்ணத்தை ஜெர்மானியர்கள் தப்பாக வகித்து, தைரியத்துட னிருந்தார்கள். அவர்கள்கொண்ட எண்ணம் சரியல்லவென்பதை அவர்களே தெரிந்துகொள்வார்கள். இந்தியாவிலுள்ள ஐரோப்பிய சைன்யங்களை அவ்விடமிருந்து ஐரோப்பாவுக்குக் கொண்டுவர தெய்வீகமான ஏற்பாடுகள் செய்யப்படும். அவ்விடத்தில் எவ்வளவு அவசியமோ அதைக்காட்டிலும் அதிகமான சைன்யங்களிருக்கின்றன. குழப்பத்தை உண்டாக்கக்கூடிய சக்திகள் அடக்கப்படும்.''

"சண்டையானது1913ம்வருஷத்தில் ஆரம்பிக்குமென்றும், அது சொற்ப காலத்தில் முடிவு பெறுமென்றும் ஆனல் கடூரமும், பயங்கரமுமுள்ளதா யிருக்குமென்றும் எனக்கு மறுபடியும் சொல்லப்பட்டது. அது இவ்வளவு காலந்தான் நடக்கு மென்பதைப்பற்றிய குறிப்பு என்னிடமில்லை. ஆனல் சுமார் மூன்றுமாதகாலம் நடக்குமென்று சொன்னதாக ஞாபகமிருக்கிறது. சண்டையைப் பற்றி 1911ம் வருஷத்தில் அவர்கள் செய்திருந்த யோசனையின்படி அவர்கள் எண்ணமானது இத்தேசத்தின் (இங்கிலாந்தின்) மேல் படையெடுத்து ஜயமடையவேண்டு மென்பதுதான். ஆனல் கடைசியில் மற்ற பிரதேசங்களில் அவர்களுக்குண்டாகும் தோல்வியால் திரும்பிப் போய்விடும்படி கட்டாயப் படுத்தப்படுவார்கள். பால்கன் சண்டையானது சூக்ஷமவுலகத்தில் குவிந்திருந்த இக்கோரமான சக்தியின் ஒருபாகத்தை இழுத்துக்கொண்டு விட்டது. அப்படிக்கிருந்தபோதிலும் அச்சக்தியால் ஏற்படக்கூடிய தீமைகளை முற்றிலும் மாற்றிவிடுவது சாத்தியமாகாததால், வெள்ளியம்பலத்தார்கள் அதன் வேகத்தை ஒருவாறு தடுத்துக் காலதாமஸப்படுத்திவந்தார்கள். இவர்கள் உண்டாக்கின காலதாமஸமானது நம்முடைய (இங்கிலாந்தினுடைய கப்பற்படைகளை விருத்தியாக்கிச் சீர்திருத்திக்கொள்

எப்போதுமான அவகாசத்தைக் கொடுத்தது. அன்றியும் 1912ம் ஹூ ஏப்ரல் மீ"த்தில், இங்கிலாந்தின்பேரில் படையெடுப்பைப் பற்றிய பயம் அநேகமாக இனிக்கிடையாது என்பதாக எனக்குத் தெரிவிக்கப்பட்டது. தைரியத்தைக் கொடுக்கக்கூடிய இவ்வுறுதிமொழி மற்றொருமுறை அடுத்த மாதத்திலும் எனக்குத் தெரிவிக்கப் பட்டது. இக்காலத்தில் மிஸ்டர் வின்ஸ்டன் சர்சில் என்பவர் கப்பற் படையை அதிகமாக சிரமப்பட்டுச் சீர்திருத்தியதற்காக அவருக்கு அதிக கண்ணியதை கொடுக்க வேண்டுமென்றும் சொல்லப் பட்டது."

"இந்த வருஷத்தில் ஐரோப்பியர்களுக்குள் பெரிய குழப்பத்தை உண்டுபண்ணுவதற்காக அடிக்கடி பல ஏற்பாடுகள் செய்யப்பட்டதையும், அதை வெள்ளியம்பலத்தார்கள் தடுத்துக்கொண்டிருப்பதையும், அப்போதைக்கப்போது எனக்குத் தெரிவிக்கப்பட்டதால், இச்சண்டைக்குமுன் பெரிய கலகத்துக்கு ஆபத்தமாயிருந்த, அயர்லாந்தில் என்ன நடக்குமோவென்று அடிக்கடி கேட்க ஆவலுள்ளவனாயிருந்தேன். அதைப்பற்றிக் கவலை வேண்டாமென்றும் அயர்லாந்தில் யுத்தமொன்றும் நடக்காதென்றும் எனக்குச் சொல்லப்பட்டது. இவ்விஷயத்தைப் பற்றியும், இப்போது நடைபெறும் பெரிய சண்டையைப் பற்றியும், முன் யோசனையுடன் எனக்குத் தெரிவிக்கப்பட்ட முக்கிய விஷயங்களெல்லாம் அநேகமாக நடைபெற்றுவிட்டன. இச்சண்டையினால் ஏற்பட்டிருக்கும் கொடுமையானது இப்பூமிக்கு அடுத்ததாகவுள்ள சூக்ஷ்மஉலகத்தின் கீழ்ப்பாகங்களிற் சூழ்ந்து நாம் நினைக்கவும் சாத்தியமற்றதான ஒரு பெரிய பயங்கரமான தோற்றத்தை உண்டாக்கியிருக்கிறது. 1913ம் ஹூ ஏப்ரல் மீ"த்திலேயே இச்சண்டை விஷயமான மற்றொரு குறிப்பும் என்னால் பதிவுசெய்து வைக்கப்பட்டிருக்கிறது. அதிற்கண்ட விஷயங்களாவன:—"மித்திரர்களாயிருக்கிற (allies) தேசங்களின் ஆயத்தங்களை ஜெர்மனி நன்றாகத் தெரிந்து கொண்டிருப்பதால் சண்டை ஆரம்பிக்காமலிருக்கிறது. சண்டை ஆரம்பித்தால் இடதுபக்கத்தில்தாக்க இரண்டுலக்ஷம்பேர்களை பிரான்சுக்கு அனுப்பவேண்டும்."

ஆத்தங்குடி M. ஸ்வாமிநாதையர்.

வருங்கால லக்ஷ்யங்கள்.

ஸ்வாதந்திரியம்.

ஜனங்கள் ஸாதாரணமாய்த் தங்களுடைய அபிப்பிராயங்களை இஷ்டப்படி வெளியிடுவதிலும், தங்களுடைய பகுத்தறிவிற்கும் மனச்சாக்ஷிக்கும், யுக்தமாகத் தோற்றுகிறபடி காரியங்களைச் செய்வதிலும், ஏதாவது சட்டதிட்டங்களாலோ, அல்லது உலக வழக்கங்களாலோ, அல்லது வேறு வெளி நிர்ப்பந்தங்களாலோ, தடைப்பட்டிருந்தா லொழிய, தாங்கள் ஸ்வதந்திரர்கள் என்று நினைக்கிறார்கள். ஒருவன் தான் கொண்ட அபிப்பிராயங்களை வெளியிடுவதிலும், தான் இச்சித்த காரியங்களைச் செய்வதிலும், அது போலவே மற்றவர்களும் யதேச்சையாய் அவர்களுடைய அபிப்பிராயங்களை வெளியிடவும், நினைத்த காரியங்களைச் செய்யவும், விரோதமில்லாது மட்டிலும் அவன் ஸ்வாதந்திரியமுள்ளவ னென்று படித்தவர்கள் கூட எண்ணுகிறார்கள். ஆனால் அவன் தன்னுடைய காமக்குரோதாதிகளை அடக்க முடியாமல், விருப்பு வெறுப்புகளுக்கு ஆளாகி, அறிவின்மையில் ஆழ்ந்து, சமாதான மில்லாமல் அலையுண்டு திரியும் பக்ஷத்தில் அவன் ஒரு அடிமையே யொழிய ஸ்வாதந்திரிய முள்ளவனல்ல. அப்படிப்பட்டவன் குடி, மீதூண், வியபிசாரம், கர்வம், பொறாமை, சோம்பல், பகை முதலான கொடிய துர்க்குணங்களுக்கு இருப்பிடமாய் விடுகிறான். அவனுக்குள் குடி கொண்டிருக்கும் அந்தச் சத்துருக்களிட மிருந்து அவனை விடுவிக்க வேண்டுமானால் வெளி நிர்ப்பந்தங்கள் ஏற்படுத்துவதைத் தவிர, வேறு மார்க்கமில்லை. அப்படிப்பட்டவன் எவ்வளவுக்கு எவ்வளவு வெளி நிர்ப்பந்தங்களில்லாமல், யதேச்சையா யிருக்கிறானோ அவ்வளவுக் கவ்வளவு அந்தச் சத்துருக்களுக்கு அடிமையாய் விடுகிறான். அப்படிப்பட்டவனை, அவன் யாதொரு விதமான வெளி நிர்ப்பந்தங்களுக்கும் உட்படா விட்டாலும் ஸ்வதந்திர னென்று சொல்வது எப்படித் தகும்?

ஈசுவரனுடைய அம்சபூதனான அந்தராத்மா ஸ்வாராஜ்ஜியம் பெறுவது தான் ஸ்வாதந்திரியம். மானிட சரீரமாகிய ராஜ்யத்தை

---

* Herald of the Star (நக்ஷத்திர தூதன்) என்னும் ஆங்கிலப் பத்திரிகையின் 1914வரு மே மீ சஞ்சிகைக்கு மாதுஸ்ரீ அன்னிபெஸண்ட் அம்மாளால் எழுதப்பட்ட வியாசத்தினின்று தமிழில் எடுத்தெழுதப்பட்டது.

ஜீவன் ஒப்புக்கொண்டவுடன், இந்திரியங்கள், மனது, காமக்குரோ தாதிகள் ஆகிய எல்லாம் அவனுடைய அதிகாரத்திற்குக் கீழ்ப்படி யாமல் கலகம் செய்து அவனை ஜயித்துத் தன் வசப்படுத்த முயலுகி ன்றன. அவைகளுடன் நெடுங்காலம் போர் புரிகிறான். அவன் ஏறியிருக்கும் சரீரமாகிய ரதத்தை ஆசைகளாகிய முரட்டுக்குதிரை கள் அங்குமிங்கும் இழுக்க, மனம் என்னும் கடிவாளமும் அறுந்து போய் வசப்படாமல் போகிறது. நாளடைவில் சிறுகச்சிறுக, சிரமப் பட்டு, இந்திரியங்கள் மனது முதலானவைகளைத் தன் வசப்படுத்தி காமக்குரோதாதிகளான சத்ருருக்களை ஜயித்து ஸ்வாராஜ்யம் பெறு கிறான். அதன்பேரில் முன் கலகம் செய்து கொண்டிருந்தவைக ளெல்லாம், ராஜ விசுவாசத்துடன் அவனுடைய ஆக்ஞைக்குக் கீழ்ப் படிந்து நடக்கின்றன. முந்தித் தீங்கை விளைவித்துக் கொண்டிரு ந்த அடங்காத ஆசை மனது முதலானவைகளெல்லாம் அவனுடைய ஸங்கல்பத்தை ஸாதிக்க உபயோகமான சக்திகளாகின்றன. அப் போது தான் அந்த ஜீவனுக்கு ஈசுவர ஸங்கல்பத்தையே தன்னு டைய ஸங்கல்பமாக கைக்கொள்ளவும் அதை நிறை வேற்றவும் ஸாத்தியமாகிறது. அப்போது தான் அந்த மனிதன் ஸ்வாதந்திரி யம் பெற்றவனாகிறான்.

மனிதன் அனேக காலம் இன்ப துன்பங்களை அநுபவித்து, எது நன்மை, எது தீமை என்றறிந்து தீமையைத்தள்ளி நன்மை யைக் கைக்கொண்டு ஈசுவர ஸங்கல்பத்தை அனுசரித்து நடந்தால் மட்டும் பேரின்பத்தை யடையலா மென்று தெரிந்து கொள்கிறான். ஸ்வநயத்தைப் பாராட்டாமல் மனப்பூர்வமாய் ஸர்வ பூதங்களுக்கும் ஹிதத்தைச் செய்யப் பிரவிர்த்திக்கிறான். அது தான் ஸ்வாதந்தி ரியம் பெற்றவனுக்கு லக்ஷணம்.

ஆகையால் ஸ்வாதந்திரியம் பெற வேண்டுமானால் இந்திரியங் கள் மனது, காமக்குரோதாதிகள் இவைகளை அடக்கித் தன் வசமா க்கி நல்வழிப்படுத்தல் வேண்டும். தன்னை அடக்கினவனுக்குச் சட்ட திட்டங்கள் தேவையில்லை. அவன் பிறருக்குத் தீங்கு செய்யமா ட்டான். தன்னை அடக்காதவனுக்கு ஸ்வாதந்திரியமும் அதிகார மும் கொடுத்தால் தானும் மேன் மேலும் கெட்டு, தன் அதிகாரத்தி ற்குள் அகப்பட்டவர்களையும் கெடுத்து விடுவான். பிறரை அடக்கி

யாள விரும்புகிறவன், முதலில் தன்னை யடக்கியாள சக்தியுள்ளவனாக வேண்டும். ஒருவனுக்குப் பிறர் மேல் அதிகாரம் கொடுப்பதாயிருந்தால் அவன் கெட்டிக்காரனாக இருந்தால் மட்டிலும்போதாது. தீய குணங்களை வேரறுத்து நற்குணங்களைப் பயிற்சி செய்தவனாக இருக்கவேண்டும். அப்படி அன்பும் அறிவும், நற்குணங்களும் நிறைந்தவர்களிடம் ஸர்வாதிகாரத்தையும் ஒப்புவித்து விட்டால் அப்போது தான் அறிவீனர்களுக்கு க்ஷேமமுண்டாகும். அவ்விதமான பக்குவத்தை யடையாத மனிதன் ஸ்வாதந்திரியம் பெற அர்ஹனல்ல. குற்றம் செய்கிறவர்களெல்லாம் அவ்விதமாகப் பக்குவமடையாதவர்கள் தான், இன்னது செய்யத் தகுந்தது, இன்னது செய்யத் தகாதது என்ற ஸாமான்ய ஞானம் கூட அவர்களுக்குக் கிடையாது. தகாத காரியங்களில் பிரவிர்த்திக்கும்படி அவர்களைத் தூண்டுகிற கெட்ட குணங்கள் விலகி, அறிவின்மை நீங்கி, கெட்ட செய்கைகளைச் செய்வதினால் விளையும் தீங்குகளை அவர்கள் அறிந்து, நல்ல செய்கைகளினால் வரும் லாபத்தையும் சௌக்கியத்தையும் அவர்கள் உணர்ந்து, கெட்ட செய்கைகளை முற்றிலும் விட்டு, நல்ல செய்கைகளை நாடும்வரை, பக்குவமான ஜீவர்களின் கீழ் அவர்களை அமர்த்தி, நல்வழிப்படுத்துவதற்கான கட்டுப்பாடுகளுக்குள் அவர்களை வைக்க வேண்டும். அப்படிக்கல்லாமல் கொஞ்ச காலம் அவர்களைச் சிறையில் வைப்பதினால் பக்குவமடைந்து விடுகிறதில்லை. சிறையிலிருந்து அவர்கள் விடுதியானவுடன் ஸ்வாதந்திரியம் பெற்று விட்டார்களென்று சொல்லுகிறோமே. அதுவா ஸ்வாதந்திரியம்? உயர்ந்த வாழ்வை யடைவதற்குப் பிரதிபந்தங்களாயுள்ள சரீரம், இந்திரியங்கள், மனது, ஆசாபாசங்கள் முதலானவைகளை யடக்கி நல்வழிப்படுத்தித் தன்னுள்ளிருக்கும் ஈசுவரத் தன்மையை, விகஸிக்கச் செய்து ஸித்திபெற்ற மகா புருஷர்கள் தாம் உண்மையாக ஸ்வதந்திரியம் பெற்றவர்கள். நாமும் அந்த மார்க்கத்தைக் கடைப்பிடித்து அவ்விதமான ஸ்வாதந்திரியத்தைப் பெறுவோமானால் ஈசுவரத் தன்மையை யடைந்து சாயுஜ்யம் பெற்று, பரமாத்மாவாகிய சீமைக் கமலத்தில் ஒரு முகமாக அமைந்து நித்தியானந்தத்தை யனுபவிப்போம்.

ஸேவாநந்தன்.

கலைஞானத்தின் தற்காலதசை.

இவ்விந்தியா தேசத்தில் ஸாதாரணமாக இக்காலத்தில் நம்மவர்களுடைய வழக்கத்தில் ஸௌந்தர்யம் (Beauty) என்னும் உயர்ந்த மனோபாவம் இல்லாமற் போய்விட்டதைக் காண்கிறோம். நம் வாழ்நாளில் நித்தியம் செய்துவரும் எத்தொழிலையும், எக்கருமத்தையும் அழகுறச் செய்துமுடித்தலே மேன்மையானது. நாம் இக்குணத்தைக் கைக்கொண்டாலன்றி, மானிடப் பிறப்பின் பெருமையற்றவர்களாகக் கருதப்படுவோம். ஸௌந்தர்யம், அழகு என்பதின் பெருமைதான் பிரகிருத வியாஸத்தில் நாம் முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது. வீண் ஆடம்பரத்திற்காகத் தான் அழகு வேண்டியது என்னும் தப்பெண்ணம் தவிர்க்கப்பாலது. நம்முடைய ஆசரணையில் ஒவ்வொரு அற்பக் காரியத்திலும் அழகு என்னும் பிரதான அம்சம் பூரணமாய் விளங்கவேண்டும். இராமாயணம் முதலிய நம் பூர்வ சரித்திரங்களில் நமது முன்னோர்களாகிய ஆர்யர்களின் நாகரிகத்தைப்பற்றி வேண்டியமட்டில் படித்திருக்கிறோம். அயோத்தியாபுரி, லங்காபட்டணம் இவற்றின் அலங்காரச்சிறப்புதான் என்ன? மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் உத்தியான வனங்களும் அவற்றிலுள்ள தடாகங்களும், அவைகளில் நீந்தும் ஹம்ஸங்களும் இவ்வாறு வர்ணனைகளெல்லாம் வாசிக்கும்மாத்திரத்திலே நம்மைக் களிப்புறச் செய்கின்றன; நம் மனதைக் கவருகின்றன. நமது இந்தியதேசத்துப் பிரதான பட்டணங்களில் தற்கால நாகரிகம் முற்காலத்தியதைப்போல் அவ்வளவு மனோரம்மியமாக இல்லை. முற்றும் மாறாகவே இருக்கிறது. நகரவாஸத்தில் சுத்தமானகாற்றே அரிதாயிருக்கிறது. தெருக்களிலெல்லாம் சாக்கடைகளினின்று ஸதா துர்நாற்றம் வீசிக்கொண்டிருக்கிறது. ஆகையால் இக்காலத்தியராகிய நமக்கு உயர்ந்த மனோபாவங்களே உண்டாவதற்கு இடமில்லை. இக்காலத்திலுங்கூடப் புதியநாகரிகம் தலைப்படாத கிராமங்களில் போய்ப்பார்த்தால், கிராமவாஸம் முற்றும் அழகு வாய்ந்ததாகவே காணப்படும். கிராமவாஸிகளின் நடைஉடை பாவனைகள், அவர்களின் சுத்தமான ஆசாரம், இவைகளெல்லாம் நம்முடைய பிராசீன தர்மங்களின் அழகை நன்றாய் வெளிக் காட்டுகின்றன. புதிய நாகரிகம் இப்போது பரவிவரவர, நம் வீடுகளில் வெண்கலம்'

செம்பு பித்தளை இவற்றுலாய பாத்திரங்களுக்குப் பதிலாக கிரேஸின் எண்ணெய்த் தகரங்கள்தான் காணப்படுகின்றன. சில காலத்திற்கு முன்னெல்லாம் நமது கிருஹங்களில் கல்யாணம் முதலிய உத்ஸவம் ஏதேனும் நடக்கும் பக்ஷத்தில் அநேக வீடுகளிலிருந்து தீர்த்த பாத்திரங்கள், சமையல் பாத்திரங்கள் முதலியன இரவல் வாங்கிக் காரியம் முடித்தபிறகுத் திருப்பிக்கொடுக்கும் வழக்கமுண்டு. இப்போது தகரப்பாத்திரங்களைக் கடையிலிருந்து விலைக்கு வாங்கிவருகிறோம். பிறகு மூன்றுநாள் அப்பாத்திரங்கள் எறிந்துவிடத்தக்கன வாகிவிடுகின்றன. இதை அநேகர் அற்பமென மதிப்பார்கள். இதில்தான் பெரிய இரகஸியம் மறைந்துகிடக்கின்றது. ஏனென்றால் பிரகிருதிப் பொருள்களில் (Nature) இயற்கையாகவே அழகு அமைந்திருத்தலால், இப்பொருள்களுக்கருகே எப்போதும் நாம் வஸித்தால்தான், அவைகளிலியங்கும் ஈசுவராம்சமாகிய ஸௌந்தர்யம் நம் மநத்திற்றுக்கி, 'அகத்தினழகு முகத்தில் தெரியும்' என்றபடி முகவிலாஸத்தையும், நல்ல ரூபத்தையும் ஏற்படுத்துகின்றது. ஆகாயத்தையளாவிய மலைப்பிரதேசங்களிலும், அங்கே பக்ஷிகள் கொஞ்சிக்குலாவி விளையாடுவதிலும், அங்குள்ள காட்டுப் புஷ்பங்களினின்று வாஸனையைக் கவர்ந்து, மலைபருவிகளின் மெல்லிய நீர்த்துளிகளையும் சேர்த்து வீசுகின்ற மந்த மாருதத்திலும் தான் ஸௌந்தர்யம் என்ற ஈசுவராம்சம் பிரஸந்நமாயிருக்கின்றது. இக்காலத்துப் பட்டணவாஸிகளுக்கு அவ்வித அழகைக் கண்டு களிப்பதற்கே ஏதுவில்லாமலிருத்தல் நம் இந்திய ஜநஸமூஹத்தின் கீழான தசையைக் குறிக்கிறது. இப்போது, வீடுகளைச் சுற்றி பசுமை நிறைந்திருக்கும்படி மரங்கள் புஷ்பச்செடிகள் வைத்து வளர்க்கிறோமன்றோ? நம்மில் வஸிக்கும் அந்தராத்மா ஈசுவரனின் ஒரு பொறியாகையால், ஸௌந்தர்யம் என்னும் விஷயத்தில் ஸ்வபாவமாகவே நம் எல்லோருக்கும் ஒரு ஆநந்தம் ஜநிக்கின்றது. இது காரணம் பற்றித்தான், தோட்டங்களுடன் கூடிய பங்களாக்கள் அமைந்துள்ள (Garden Cities) பட்டணங்கள் புதிதாய் நிர்மிக்கப்பட்டு வருகின்றனவே யன்றி, வேறு ஆடம்பரம் முதலிய அநாவசியமான காரணங்களைக் கொண்டு ஏற்படுகின்றனவல்ல. எங்கே பார்த்தாலும் சுண்ணாம்புச் சுவர்களையும் கல் கட்டிடங்களையும் மட்டும் பார்த்து

அலுத்துச் சலித்திருக்கும் கண்களுக்கு கிராமங்களிலுள்ள பசும்புற்றரைகளும், காலையில் ஸூர்ய வெளிச்சம் அப்பசும்புற்களிலுள்ள நீர்த்துளிகளில் பாய்ந்து வெளிக்கிளப்பும் நாநாவிதமான வர்ணங்களும் மேற்றிசையில் விழும் வானவில்லும் பார்வைக்கு வெகு அவசியமாயிருக்கிறபடியால்தான் பட்டணவாஸிகள் வருஷத்திற்கிரு முறையாவது கிராமங்களுக்கு சென்று விடுமுறை நாட்களில் சுகிக்கிறார்கள். அழகு வாய்ந்திராத எவ்விடத்தும் காலம் கழிப்பது நமக்கு அப்பிரியமாகவே யிருக்கிறது. ஈசுவரனின் அநந்த கல்யாணகுணங்களில் ஒன்றாகும் இந்த ஸௌந்தர்யம். ஸர்வக்ஞத்வம், ஸர்வ பராக்ரமத்வம் இக்குணங்களும் அவரிடம் பூர்ணமாயிருந்தாலும், நாம் ஸௌந்தர்யம் என்னும் மார்க்கத்தைப்பற்றி ஈசுவரனை ஸுலபமாய் ஸமீபிக்கக்கூடும். நாம் நன்றாய்ச் செய்து முடிக்கும் எக்காரியத்திலும் அழகு என்பது நமக்குத் தெரியாமலே வந்து அமைகின்றது. நம்முடைய கலைஞானமெல்லாம் (Art) புதிதாக வஸ்துக்களை அழகுடன் ஸ்ருஷ்டித்தலுக்குதவாது, ஏற்கனவே ஸ்ருஷ்டித்திருப்பதைப் பார்த்து, முற்றிலும் அதையநுஸரித்தே, அதைப்போலவே யிருக்கும்படி செய்தலுக்குதவும். பிரகிருதிப் பொருள்களின் அழகைக்காட்டிலும் அதிக அழகானவைகள் மநுஷ்யனின் வேலைத்திறத்தால் ஏற்பட முடியாது எனச் சிலர் ஆக்ஷேபித்தாலும், ஸாதாரணமாய் நம்போலியர்கள் பார்த்தறியாத அழகின் நுட்பங்களை எவ்வளவு இலகுவாய் ஸ்ரீ ராஜா ரவிவர்மாவைப் போன்ற சித்திரக்காரர்கள் தம் படங்களில் வெளியிட்டு நமக்கு அறிவுறுத்துகிறார்கள்! உதாரணமாக ஒரு புஷ்பத்தை யெடுத்துக்கொள்வோம். வாஸ்தவந்தான், புஷ்பம் அழகாயிருக்கிறது. விகாஸமுறையில் மநுஷ்ய வர்க்கத்தினும் தாழ்ந்த ஒரு அற்பமான வநதேவதை (Nature Spirit) யின் காரியம் அப்புஷ்பம். அதன் அற்ப அறிவுக்கேற்றபடி, ஈசுவரனின் ஸௌந்தர்ய அம்சத்தை புத்தியிற் கிரஹித்து அப்புஷ்பத்தில் வியக்தப்படுத்தியிருக்கிறது. இந்த அற்ப வநதேவதையின் அறிவைக்காட்டிலும் தேர்ந்த சித்திரக்காரனின் (Artist) புத்திக்கூர்மை விசேஷித்ததல்லவா? சித்திரக்காரன் விகாஸமுறையில் உயர்ந்த படியில் உள்ளவனல்லவா? நல்ல சித்திரக்காரரென்ன, கவிகளென்ன, ஸங்கீத வித்வான்களென்ன இவர்கள் ஈசுவரனுடைய

ஸௌந்தர்யத்தை நன்றாய்ப் பார்த்தும், கேட்டும், பிறருக்கு வெளிப்படுத்தக்கூடிய சக்தி வாய்ந்தவர்கள். நம் போலியர்களுடைய கண்களும், காதுகளும் வாக்கும் ஈசுவரனின் வைபவத்தை, பார்த்துக் கேட்டு வெளிப்படுத்த இயலாமல் அவ்வளவு மழுங்கலாக இருக்கின்றன. ஈசுவரனின் ஸௌந்தர்யமான காட்சி எப்போதும் விளங்கிக்கொண்டேயிருக்கிறது. ஆனால் நாம் குருடர்களாக விருக்கின்றோம். கலைஞர்கள் (Artists) அக்காட்சியை ஸாமானியர்களுக்கு வியக்தமாக விளங்கச்செய்கிறார்கள்.

கலை என்பது (Art) தற்காலத்தில் எவ்வித உந்நத தசையை அடைந்திருக்கிறது என்பது மேற் கூறியவாறு விசாரிக்கப்பட்டது. இனி, வருங்காலத்தில் கலாஞானம் எம்மட்டு அபிவிருத்தி யடைய வேண்டியிருக்கிறது என்பதைப் பார்ப்போம். கலைஞர்களை (Artists) ஈசுவரனின் ஸௌந்தர்யக் காட்சியைப் பிரதிபிம்பிக்கச்செய்யும் கண்ணாடிகள் எனக் கூறலாம். அவர்கள்தான் தற்காலத்திய ரூபங்களினின்றும் விசேஷமாய் விகஸிக்கவேண்டிய புதிது புதிதான ரூபங்கள், வர்ணங்கள் எவ்வளவிருக்கின்றன வென்பதைக் கவனிக்க இயலும். அவ்வாறு கவனித் துழைப்பவர்கள்தான் வருங்காலத்திய அபிவிருத்திக்கு இப்போதே வித்திடுபவர்களாவர்.

சென்றுகொண்டிருக்கும் காலவியற்கையைப்பற்றி மட்டும் இங்கு விவரமாய் எழுதினோமல்லாது, வருங்காலத்தைப் பற்றிச் சுருங்கவே முடித்துவிட்டோம். ஏனெனில் உலகத்தின் தற்கால நிலைமையானது ஒரு பிரளய காலமென்றும், ஒரு புதிய நாகரிகம், புதிய மதம், புதிய உலகமே ஏற்படவேண்டியதற்கு முந்திய காலமென்றும் உணர்ந்தாலன்றி, வருங்காலத்திற்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்ய இயலாது. பிரபஞ்ச நியதியைப்பற்றிப் பூர்ணமான பரிக்ஞானமில்லாவிடில், ஆன்மாக்கள் உஜ்ஜீவிக்கவேண்டி ஏற்படுத்தப்பட்டிருக்கும் பிரபஞ்சமாகிய பள்ளிக்கூடத்தில் பரீக்ஷைகள் தேற முடியாது. உலகம் ஒரு மருளாகவே தோன்றும், பிரபஞ்சத்தில் ஈசுவரன் வியக்தமாயிருத்தலை நாம் காணமுடியாது. தொன்று தொட்டு மநுஷ்ய வர்க்கம் மதஸம்பந்தமாகவோ, பூதசாஸ்திர ஸம்பந்தமாகவோ, கலைகள் ஸம்பந்தமாகவோ தற்காலத்தில் நன்றாய்

விகஸித்திருக்கிறது. அதன் வருங்காலத்தில் விகாஸ முறை எத்தன்மையது என்பதைப்பற்றி இப்போதிருக்கிற நாம்தான் கவலைகொள்ள வேண்டியவர்கள். இப்போதுள்ள நம் கல்விப் பயன்களை இன்னும் மேன்மையான காரியங்களுக்கு வருங்காலத்தில் உபயோகப்படுத்துவோமாக. இறந்த காலத்தைப்பற்றி நாம் கவலை கொள்ளவாவது விஸனிக்கவாவது நியாயமில்லை. இனி வருங்காலம்தான் நமக்கு உரித்தானது.

மேற்கூறிய பிரகாரம் மநுஷ்யவர்க்கம் மத விஷயத்திலும், பூதசாஸ்திர விஷயத்திலும், இனி விகஸிக்கவேண்டிய முறைகள் பலவாறாக உள்ளன. இவ்வித ஆராய்ச்சியால், மேற்கூறிய விஷயங்களின் அபிவிருத்திக்கு இடையூறாயுள்ள அநேக சீர்கேடுகளை நிவிர்த்தித்து அபிவிருத்திக் கனுகூலமான அநேக ஸாதனங்களை ஏற்படுத்தப் "பாமர் வரும் தருணமிது" என நாம் அறியவேண்டியவர்கள்.

B. S. ராமசுப்பையர்.

நன்மொழி.

ஸத்கதா சிரவணத்தால் காதுக்குப் பெருமையேயன்றி, குண்டலத்தாலல்ல. ஈகையினால் கைக்குப் பெருமையே யொழிய, ரத்ந கங்கணத்தாலல்ல. அதேமாதிரி சரீரத்திற்கும், கருணைமேலிட்டபரோபகாரமேயன்றி, சந்தனப் பூச்சானது பூஷணமாகாது.

பிறருடைய நன்மைக்குத் தன் சொந்த லாபத்தையும் தியாகஞ்செய்பவர் ஸத்புருஷர்கள் என்று சொல்லப்பெறுவர். தன் சொந்த விஷயத்திற்கும் விரோதமில்லாமல் பிறர் காரியத்தையும் இயன்றமட்டில் கவனிப்பவர்கள் ஸாமான்யர் எனப்பெறுவர். தன் காரியத்திற்காகப் பிறருடைய சௌகர்யத்தைக் கவனியாதவர்கள் மாநுஷ ராக்ஷஸர்கள் எனப் பெறுவர். தன் கார்யத்தையும் கெடுத்து, பிறர் காரியத்தையும் கெடுப்பவர்களை எத்தகையரென்று கூறுதல் தெரியவில்லை!

பர்த்ருஹரி.

பரோபகாரம்.

295

அநந்த பேதமாக விளங்கும் ஆன்ம கோடிகளெவற்றுக்கும் பொதுவில் அறிவு இச்சை செயல்களுண்டு. அவைதாம் தாம்அடைந்த பிறப்புக்களுக் கேற்ற வாறு பாசத்தடை நீங்கி அறிவிச்சை செயல்கள் விளங்கப் பெற்ற மாத்திரையில் மேன்மேலான பிறவிகளை யெய்திபும், பின் அவ்வவற்றிற் கேற்றவாறு விளங்கப் பெற்றும் வருகின்றன. நாம் காண்கின்ற பிறவிக ளெல்லாவற்றுள்ளும் மனிதப்பிறவியே அறிவாதியவற்றால் மேம்பட்டு விளங்குகிறது. அதனாலேயே மானுடப்பிறவி கிடைத்தல் மிகவும் அருமையென்றும், அது மிகுந்த புண்ணியத்தாற் கிடைக்க வேண்டு மென்றும் பெரியோர் கூறுவர். தாயுமானஸ்வாமிகளும் "எண்ணரிய பிறவிகளில் மானுடப் பிறவிதான் யாதினும் அரிதரிது காண்" என்று கூறியுள்ளார்கள்.

அத்தன்மையதான மானுட யாக்கை யெய்தப் பெற்றவர்களினும் அறிவு முதலியன மலர்ந்து விளங்கப் பெறுபவர்களே பெரியோராவர். அவர்களே பரோபகாரிகளுமாவர். ஆன்மாக்க ளெல்லாம் உயிர்த்தன்மையில் ஒரு நிகரானவை யென்றும், எல்லாவுயிர்க்கும் சுகதுக்கங்களுண் டென்றும், எவ்வுயிரும் பராபரன் சந்நிதி யென்றும், தமக்குப் பிறருதவி இன்றியமையாமை போலப் பிறர்க்கும் தம் போன்றவ ருதவி இன்றியமையாத தென்றும் அறிதலாகிய அறிவும், அவர்கள் பால் வைக்கும் நேசமாகிய இச்சையும் முதிர்ந்த வழியே அவர்கட்கு உபகாரஞ் செய்ய முன்வருதலும் கூடும். இவ்வுபகாரத்திற்கும் ஈகை, தானம் என்பவற்றுக்கும் வேறுபாடுண்டு. ஈகையாவது வறியராயினார்க்கு அவர் வேண்டிய பொருளை அளித்தல். தானமாவது அறிவொழுக் கங்களாற் சிறந்த தக்கோர்க்கு வேண்டும் பொருளை உவகையோடு அளித்தல். இவை உபகாரத்தின் பகுதியாயடங்கும். உபகாரமாவது வரையறையின்றி யாவர்க்கும் வேண்டுவன புரிதல் உலகில் எச்சாதியாராயினும் எச்சமயத்தவ ராயினும் செல்வராயினும் கல்லோராயினும் தொழில் வல்லோராயினும் அல்லோராயினும் அனைவர்க்கும் பிறருதவி இன்றியமையாததாகும். சுருங்கச் சொல்லின் உபகாரமின்றி உலகம் நடை பெறாதென்க.

அவ்வுபகாரந் தான் தம்மை யடைந்தவர்க்குத் தனித்தனி வேண்டியன செய்தலும், ஜனசமூகத்திற்குப் பயன் படுமாறு பொதுவே தருமஸ்தாபனங்கள் ஏற்படுத்தலும் என இருவகையாகும். சாலை போடுதல், நிழல்மரம் வைத்தல், குளம் கிணறு வெட்டுவித்தல், தண்ணீர்ப் பந்தர் மடம் அன்னசத்திரம் கல்விச்சாலை முதலியன ஏற்படுத்தல், இவை முதலாயின வெல்லாம் பொதுவகையான தரும ஸ்தாபனங்களாம், இவை செய்தோர் புகழும் புண்ணியமும் ஒருங்கே அடையப் பெறுவர். ஒவ்வொருவரும் தாம் அடைந்துள்ள இடம் பொருள் ஏவல்களுக் கேற்றவாறு யாதாயினும் ஒன்றினாலோ பல வற்றாலோ உபகாரஞ்செய்யலாம். அவை வாயக்கப் பெறாதவர்களும் தம் மனம் வாக்கு காயங்களினால் பிறருக்கு உபகாரஞ் செய்யலாம். ஆகவே உலகில் உபகாரஞ் செய்ய முடியாதவரென்பதற்கு யாருமேயில்லை. ஒவ்வொருவரும் தாம் அறிந்தோ அறியாமலோ பிறருக்கு உதவி செய்து கொண்டு தானிருக்கிறார்கள்.

அங்ஙனமாயின் அறிவுமுதலியன விளங்கப் பெற்றவரே பரோபகாரியாவர் என முதலிற் கூறியது என்னையெனிற் கூறுவேன். போதுமான கல்வியறிவு வாய்க்கப் பெறாதவர்கள் சிற்சில சமயங்களில் பிறருக்கு உபகாரஞ் செய்தாலும் அது மனிதர்க்கு இன்றியமையாத கடமை யென்று தாம் உணராமையால் கட்டாயமாகச் செய்ய வேண்டிய சில சந்தர்பங்களில் செய்யாதிருத்தலு முண்டு. அது மாத்திர மன்றிப் பிறர்க்கு அபகாரஞ் செய்தலும், பிறர் செய்யும் உபகாரச் செயல்களுக்கு விரோதமான காரியங்களைச் செய்தலுங் கூட அவர்க்ளிடத்தி லுண்டு. கல்வியறிவும், அன்பு முதலிய நற்குணமும் பொருந்தப் பெற்ற பெரியோராயின் எப்பொழுதும் பிறர்க்கு நன்மை செய்தலே யன்றித் தீங்கினைச் சிறிதும் சிந்தியார். அதுவே யன்றித் தாம் முதலிற் செய்தவுதவியை மறந்து பிறர் தமக்குத் தீங்கு செய்தாராயினும் அவர்களிடத்திலும் தீங்கை எண்ணாமல் திரும்பவும் நன்மை செய்தலே பெரியோரின் செயலாகும், ஆதலின் அன்னவரே உண்மையில் பரோபகாரியாவரெனக் கூறுவது பொருத்தமாம் என்க. எவ்வளவு நூல்களைப் படித்தும் பேய்ச் சுரைக்காய் போன்று இழிகுண வியல்பு சிறிதும் நீங்கப் பெறாதவரைப் பெரியோரென்று கூறுதல் கருத்தன்றாம்.

கல்வியும் செல்வமும் ஒருங்கே படைத்தவர்கள் பரோபகார சிந்தையும் உடையராயின் உலகிற்குப் பயன்படுமுறையின் அவர் போற் சிறந்தார் பிறரில்லை. அத்தகைய பெரியோரிடத்திலுள்ள செல்வமானது, இலை பூ காய் கனிமுதலிய ஒவ்வோருறுப்பும் தவறுதலில்லாது மருந்தாகப் பெற்றமரம் ஊரில்நின்று பயன்படுமாறு போலப் பொன்னாலும் மணியாலும் நெல்லாலும் நீராலும் மற்றும் ஒவ்வோருறுப்பாலும் உலகிற்குப் பயன்படுவதாகும். ஒருவர் உலகத்திற்குப் பலவிதத்திலும் உதவி செய்வாராயின் உலகத்தாரும் அவர்க்கு வேண்டிய உதவிகளைச் செய்வார்கள். அதனால் அவர் புகழ் புண்ணியங்களை யடைதல் மாத்திரமன்றி இம்மையில் தம் வாழ்க்கையை யெவ்வித இடையூறுமின்றி நடத்துதற்கேற்ற சாதனங்களைத் தேடிக் கொண்டவருமாவர். எனவே ஒருவர் செய்யும் உபகாரம் இம்மையிலும் தமக்கும் பிறர்க்கும் ஒருங்கே பயன்விளைக்கின்றது. ஆனால் பெரியோர்கள் தமக்கு ஒருபயனை விரும்பி உபகாரஞ் செய்பவரல்லர். பரோபகாரமானது உலகநடை பேற்றுக்கு இன்றிமையாச் சிறப்பினதாயும், ஆன்றோரொழுக்கமாயு மிருத்தலின் யாம் இதுசெய்தல் கடமை யாகுமென்றே யெண்ணிச் செய்வர். இது உயர்ந்தாரோடு ஒத்து ஒழுகுவதும் கடமையாகக்கொண்டு செய்வதும் ஆதல்பற்றியே தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் இதற்கு 'ஒப்புரவு' என்றும் 'கடப்பாடு' என்றும் பெயர் கூறினர். பெரியோர்கள் செய்யும் எந்நற்செயலும் தமக்கென ஓர்பயன் குறித்தனவாகா. புறநானூறு என்னுந் தமிழ்நூலில் 'ஆய்' என்னும் உபகாரியைப்பற்றி யெழுந்த செய்யுட்களிலொன்று "இம்மையிற் பிறர்க்கு அளிப்பது மறுமையில் தமக்குதவும் என்று கருதுபவர் பொருளைக் கொடுத்து அறத்தினை வாங்குகின்ற வியாபாரிகளாவர்; ஆய் என்னும் வள்ளல் அத்தகையனல்லன்; அவனது உபகாரத் தன்மையானது உலகில் பெரியோர் பலரும் சென்ற வழியென்று கருதநின்றது." என்னும்பொருளுடையதாக வுள்ளது. இதனால் ஞானவான்களான பெரியோர்கள் அறஞ் செய்யும்பொழுது இம்மைப்பயனேயன்றிமறுமைப் பயனையும் விரும்ப மாட்டார்களென்பது பெறப்படுகின்றது. மறுமைப்பயனை விரும்பிச் செய்கின்ற தானதர்ம உபகாரங்கள் புண்ணிய கன்மமாய் மீட்டும் பந்தத்தையே செய்யுமாகலின் பிறவித்

துன்பத்தினின்று நீங்குதலுறும் பெரியோர்க்கு அது இயைந்ததன்றும். பெரியோர்கள் தாம் செல்வமுள்ளவராய காலத்தேயன்றி வறுமை நேர்ந்தபொழுதும் தம்மாலாம் உதவிகளைச் செய்தற்கு மனஞ் சுருங்கமாட்டார்கள். உபகாரஞ் செய்பவர்க்கு எக்காலத்தும் யாதொரு துன்பமும் உண்டாவதில்லை. உபகாரஞ் செய்தலினால் ஒரோவழி பொருட்கேடு முதலிய துன்பங்களுண்டாகுமென்று சிலர் கூறுவராயின் அத்தகைய துன்பம் ஒருவன் தன்னையே விற்றும் வாங்கிக் கொள்ளத்தக்க மேம்பாடுடையது; என்று உலகத்தார் கடைத்தேறுதற்பொருட்டு அன்னவர்க்கு உறுதிப் பொருள்களையெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்க உரைத்தருளிய தேவர் திருவள்ளுவர் கூறுகின்றார். "ஒப்புரவினால் வருங் கேடெனினஃதொருவன் விற்றுக்கோட் டக்கதுடைத்து" என்பது அவர் திருவாக்கு.

மற்றும், உலக வரம்பைக்கடந்து, அகண்டாகார நித்தவியாபக சுத்த சச்சிதானந்த சொரூப சைதன்யத்தோடு அத்வைதக் கலப்புற்று ஆநந்தாநுபவஞ் செய்யப்பெறும் முக்தர்களும் தாம் பெற்ற பேற்றை யுலகமெல்லாம் பெறவேண்டுமென்னுங் கருத்தாலேயே சரியை யாதிமார்க்கங்களை யுபதேசித்தும், அநுஷ்டித்துக் காட்டியும், சமயஸ்தாபனஞ் செய்தும் விளங்குவாராயினர். அவர்கள் செய்த பேருபகாரத்தை நினைவு கூர்தற்கு உலகமுழுதும் என்றும் கடமைப் பட்டதாகும். மகாத்மாக்களின் பேருபகாரத்தை நாமெல்லாம் அறிந்து கசிந்துருகுதற்குப் பின்னுள்ள தாயுமானஸ்வாமிகளின் அருமைத் திருவாக்கே சாலும்.

"காகமுறவு கலந்துண்ணக் கண்டீரகண்டா கராசிவ
போகமெனும்பே ரின்பவெள்ளம் பொங்கித்ததும்பிப் பூரணமா
யேகவுருவாய்க் கிடக்குதையோ இன்புற்றிடநாமினியெடுத்த
தேகம்விழுமுன் உண்பதற்குச் சேரவாரும் செகத்தீரே."

நடுக்காவேரி மு. வேங்கடசாமி நாட்டார்.

அவதாரங்கள்.

(272-ம்பக்கத் தொடர்ச்சி)

இதை வெளியிடுவதற்குக் காரணம் என்னவென்றால், அநேகம் பேர்களுக்கு குழப்பத்தை உண்டுபண்ணுகிற ஓர் வார்த்தையை விஸ்தரித்துச்சொல்வதற்கே. மஹாவிஷ்ணு என்றால் என்ன? ஸாதாரண விஷ்ணுவுக்கும் மஹாவிஷ்ணுவிற்கும் என்ன வித்தியாஸம்? அப்படிப்பட்ட வார்த்தை உபயோகப் பட்டிருக்கும் பொழுதெல்லாம் என்ன அர்த்தம் நமக்கு த்வனிக்கவேண்டும் ? மஹாவிஷ்ணுவென்றால் சூரியமண்டல முழுவதற்கும் அதிபதியான விஷ்ணுவே, ஈசுவ்ரனே. நமக்கு அவரைக் காட்டிலும் இன்னம் கொஞ்சம் அதிக ஸமீபத்தில் நம்மோடு அதிக நெருக்கமாய் ஸம்பந்தப்பட்டவராய் நமது க்ரஹமண்டலமாகிய பூமண்டலத்துக்கு அதிபதியான விஷ்ணு ஒருவர் இருக்கிறார். அவர் மஹாவிஷ்ணுவின் ஓர் பிரதிபிம்பந்தான். ஓர் சக்கரவர்த்திக்குக் கீழ்ப்பட்ட (Viceroy) மாதிரி, சூரியமண்டலத்திற்கு அதிபதியான மஹாவிஷ்ணுவிற்கு உட்பட்டவர் நமது க்ரஹமண்டலமாகிய பூமண்டலத்துக்கு அதிபதியான விஷ்ணு. அவர் மஹாவிஷ்ணுவிற்குக் கீழ்ப்பட்டவர். மஹாவிஷ்ணுவால் நியமிக்கப்பட்ட Viceroy (வைஸ்ராய்). சிலசில அவதாரங்கள் மஹாவிஷ்ணுவினிடமிருந்தே நேராக வருவதாகச் சொல்கிறார்கள். மஹாவிஷ்ணுவினுடைய அவதாரத்தைத்தான் பூர்ணாவதாரம் என்று சொல்வதுண்டு. அதில் வாஸ்தவம் எவ்வளவு இருக்கிறது என்று அறிவதற்கு நமக்கு சக்தியில்லை. ஆனால் பொதுவாய் இப் பூலோகமாகிய நமது கிரஹமண்டலத்துக்கு ஈசுவரனும், நம்மோடு

---

* ஸூரியமண்டலம் - Our Solar System.

க்ரஹமண்டலங்கள் - Planetary Chains under the Solar System.

பூமண்டலம் - Earth Chain.

ஸூரியமண்டலாதிபதி - The Solar Logos or The Solar Deity.

க்ரஹதேவதைகள் - The Planetary Spirits

பூமண்டலத்திற்குச் சேர்ந்த கோளங்கள்-The Seven Globes (A, B, C, D, E, F, G) of our Earth Chain.

அதிநெருக்கமாயும் ஸமீபமாயும் ஸம்பந்தப்பட்டவருமான பூமண்டலத்து விஷ்ணுவினிடமிருந்துதான் ஸகல அவதாரங்களும் உண்டாகின்றன என்று சொல்லலாம். இவைகளில் எங்கேயாவது ஒன்று அல்லது இரண்டு விலக்குகளிருக்கலாம். அப்படிப்பட்ட ஸமயங்களில் மஹா விஷ்ணுவே நேராக வந்தாலும் வரலாம்.

அவதாரம் எக்காரணங்களினால் அவசியமாயிருக்கிறதென்று இப்பொழுது யோசிப்போம். ஏனென்றால், அநேகம் பேர்களுக்கு இந்த இடத்தில் அநேக ஆக்ஷேபங்கள் நேரலாம். அப்படிப்பட்ட ஆக்ஷேபங்களும் ஸந்தேஹங்களும் நேர்வது ஸ்வபாவமே. அநேகம் பேர்களுக்கு இந்த விதமான ஸந்தேஹங்கள் நேரலாம். " லோகங்களைப்பற்றின நியமனம் ஆரம்பம் முதற்கொண்டு பகவானுடைய மனதில் நிச்சயமாகவே யிருக்கின்றது. மனித வேலைக்காரன் மாதிரி தன்னால் செய்து முடிக்கவேண்டிய காரியம் இன்னது என்பதை நன்றாய் ஏற்கனவே ஆரம்பத்திலேயே அறியாமல் வேலை செய்து கொண்டிருக்கிறார் என்று பகவான் விஷயத்தில் நாம் எண்ணுவதற்கு முடியாது. புத்தி பூர்வகமாய் ஆரம்பம் முதற்கொண்டு அந்தம்வரைக்கும் இந்தமாதிரி இருக்கவேண்டுமென்று நியமனம் செய்தவரும் அவரே; அந்த நியமனப்படி லோகங்களைக்கட்டி ஆளுகிறவரும் அவரே. நியமனத்தைப் பண்ணுகிறவரும் அவரே; அதை நடத்தி வைப்பவரும் அவரே. ஆகையினால் அவருக்குட்பட்ட பிரபஞ்சத்தில் நடக்கவேண்டிய ஒவ்வொரு விஷயமும், பிரபஞ்சம் ஆரம்பிப்பதற்கு முன்னமேயே அவருடைய மனதிலிருக்கவேண்டும். அப்படியிருக்கும் பக்ஷத்தில், பிரபஞ்ச வ்யவஹாரத்தின் நடுவில், பகவான் தலையிட்டுக்கொள்வதற்கு அவசிய மென்ன? அவர் நடுவில் வந்து தலையிட்டுக் கொள்வதைப் பார்த்தால், அவர்கூட எதிர்பார்க்க முடியாமலிருந்த கஷ்டம் உண்டாவதாகத் தெரியவில்லையா? நியமனத்தை நடத்தி வைக்குங்காலத்தில் நடுவில் அவர் தலையிட்டுக் கொள்வதானது, ஆரம்பத்தில் பிரபஞ்ச ஸ்ருஷ்டிக்கு முன்னமேயே தம் மனஸால் செய்யப்பட்ட நியமனத்தில் ஏதாவது ஓர் விஷயத்தை விட்டிருக்க வேண்டுமென்பதைக் குறிக்கவில்லையா? அந்தக் கஷ்டத்தை ஏற்கனவே எதிர்பார்த்து அதை நீக்குவதற்கு ஏற்கனவே உபாயந் தேடாமலிருக்கிறார் என்பதைத் தெரிவிக்கவில்லையா?

அப்படியில்லாதிருக்கும் பக்ஷத்தில் அவதாரமானது அவசியமாவ தற்குக்காரணமென்ன? நியாயமான கேள்விதான், எல்லோரும் ஸ்வபாவமாய்க் கேட்கக் கூடிய கேள்விதான். அந்தக் கேள்விக்குப் பதில் சொல்வதற்கு பிரயத்தனஞ்செய்வோம். மூன்று விதமான கார ணங்களைச் சொல்லி இந்தக் கேள்வி கேட்கிறவர்களுக்கு திருப் தியை உண்டாக்கலாம். அந்த மூன்று காரணங்களால் பகவான் தலை யிட்டுக்கொள்வது அவசியமாகவே யிருக்கின்றது. இவைகளெல் லாம் பகவானால் ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டு, அப்பொழுது பற் பல அவதாரங்கள் நடக்கவேண்டியதுதான் என்று குறிப்பாக நியமிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய சூரியமண்டலமானது மற் றொரு பெரிய நக்ஷத்திரமண்டலத்திற்கு ஓர்கிரஹமண்டலம் மாதிரி இருக்கிறதென்றும் யாதொரு ஸம்பந்தமுமற்று ஸ்வேச்சையான தல்லவென்றும் ஏற்கனவே சொன்னோம். அதனால் என்ன? நம்மு டைய சூரியமண்டலமானது ஏற்கனவே யிருக்கிற பிரகிருதியிலி ருந்து எடுத்துக்கட்டப் பட்டிருக்கிறது. அந்த பிரகிருதிக்கு ஸ்வ பாவமாகவே சிலசில குணங்களுண்டு. அதிலிருந்து ஒவ்வொரு ஈசுவரனும் தன்னுடைய மண்டலம் கட்டப்படுவதற்கு வேண்டிய பிரகிருதியை மட்டும் எடுத்துக்கொள்ளுகிறார். அந்தப்பிரகிருதியை தன்னுடைய நியமனத்துக்கும் இச்சைக்கும் ஒத்துவரும்படி விகா ரத்தையடையும்படியாகச் செய்துகொள்ளுகிறார். விகாரத்தைய டைவதற்குமுன் ஏகரூபமாயிருந்த பிரகிருதிக்குத் தான் மூலப் பிரகிருதி யென்றுபெயர். அந்த மூலப் பிரகிருதி யிலிருந்து ஒவ் வொரு ஈசுவரனும் தனக்குவேண்டியதை எடுத்துக்கொள்ளுகிறார். அந்த மூலப்பிரகிருதியானது நாம் இப்பொழுது பார்க்கிற பிரகிருதி மாதிரியிருக்காது. அது பிரகிருதியின் வேர். (The Root of Matter) நாம் இப்பொழுது பார்க்கக்கூடிய பிரகிருதி யெல்லாம் அந்தப்பிர கிருதியின் விகாரங்களே. அதனால் என்ன தெரிகிறது? நம்முடைய சூரியமண்டலத்தை ஸ்ருஷ்டித்த பகவானானவர் தன்னைவிடபெரிய மஹேசுவரனால் சிலசிலகுணங்கள் ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக் கிற பிரகிருதியிலிருந்து தனக்கு வேண்டியதை எடுத்துக்கொள்கி றார். அந்தப்பிரகிருதியில் மூன்றுகுணங்கள் அவ்யக்தமான ஸ்திதி யில் அடங்கியிருக்கின்றன. பகவானுடைய சக்தியானது அந்த

பிரகிருதியில் அநுப்ரவேசித்து, அவ்யக்த மான ஸ்திதியில் ஸமமாய் (in Equilibrium) அடங்கியிருந்த மாதிரி குணங்களை எழுப்பி, ஒன்று மற்றொன்றைவிட மேல்நாடும்படியாகச் செய்கிறது. இந்தமாதிரிதான் சூரியமண்டலமாகிய ப்ரஹ்மாண்டம் வெளிப்பட்டது. திரிகுணங்களுடைய ஸமமான ஸ்திதியை எழுப்பவேண்டும். ஏனென்றால், ஸமமாயிருத்தல் என்றால் பிரளயம் என்று அர்த்தம், அப்பொழுது சலனமே (Motion) இருக்காது. யாதொருவ்யவஹாரமுமிருக்காது. உபாதிகளும் லோகங்களும் இரா. ஜீவன்கள் வ்யவஹாரத்துக்குவரா. யாதொன்றுமே வெளிப்படாது. பிரபஞ்ச வ்யவஹாரம் உண்டாக வேண்டுமானால், பிரகிருதியின் திரிகுணங்களை அவ்யக்தமான ஸ்திதியிலிருந்து வியக்தமான ஸ்திதிக்குக் கொண்டுவர வேண்டும். அவைகள் ஒன்று மற்றொன்றைவிட மேல்நாடும்படியாகச் செய்யவேண்டும். ஸமமாயிருத்தலிலிருந்து அவைகளை எழுப்ப வேண்டும். அவைகளை அப்படி எழுப்பினால், சலனம் உண்டாகிறது. அதிலிருந்து லோகங்கள் வெளிப்படுகின்றன. கட்டப்படுகின்றன. ஆகையினால் எந்த ஸாமானைக்கொண்டு பகவானானவர் பிரபஞ்சத்தை ஸ்ருஷ்டிக்கவேண்டுமோ அதன்வழியாகவே சிலசில கட்டுப்பாடுகளுக்கு பகவானானவர் உட்பட்டவராயிருக்க வேண்டியிருக்கிறது. அவர் ப்ரஹ்மாண்டத்துக்கு வெளியிலிருக்கும் பொழுது தன்னைவிட பெரியவரும் தனக்கு ஈசுவரனு யுமிருக்கிறவரோடு கலந்து கொண்டிருப்பதால் அந்த பிரகிருதிக்குக் கட்டுப்படாமல் அதற்கு ஈசுவரனாயிருப்பார். ஆனால் லோகங்களைக் கட்டுவதற்காக அந்தப் பிரக்ருதியில் தன்னைக்கட்டுப்படுத்திக் கொள்ளும்பொழுது அவரால் உபயோகிக்கப்படவேண்டிய ஸாமான்களுடைய ஸ்வபாவத்திற்கும் யோக்கியதைக்கும் தகுந்தபடியாயும் அநுகுண மாயுந்தான் அவர் வேலை செய்யவேண்டும், அந்த நிபந்தனைகளுக்குட் பட்டுத்தான் அவர் வேலை செய்யவேண்டிய தாயிருக்கிறது.

ஸத்வ ரஜஸ் தமோகுணங்கள் ஒன்று மற்ற இரண்டைக்காட்டிலும் மேல்நாடிக்கொண்டு இடைவிடாமல் வேலைசெய்துகொண்டிருக்கையில், தமோகுணமானது ரஜோகுணத்தால் உதவி செய்யப்பட்டு ஸத்வத்தை யடக்கி மேல் நாடும்பொழுதும் தமோ குணமும் ரஜோ குணமும் சேர்ந்து இன்பத்தைக் கொடுக்கக்கூடிய ஸத்வ

குணத்தைத் தடுக்கும் பொழுதும், மூன்று குணங்களும் ஜீவகோடிகளுடைய விகாஸம்ஸரியாய் நடைபெறுவதற்கு அநுகுணமாய் வேலைசெய்யும்படிக்கும், சீர்குலைந்ததைச் சீர்திருத்தி மூன்று குணங்களும்ஸரியானஸ்திதியில் வேலைசெய்யும்படிக்கும் ஒழுங்குபடுத்துவதற்காக பகவான் வருவதற்கு இதுதான் முதல் காரணம்.

இரண்டாவது காரணம் மனிதனைப் பற்றியே. ஈசுவரனானவர் மநுஷ்யகோடிகளுடைய விகாஸத்தைப்பற்றி நினைக்கும்பொழுது, கீழ்வர்க்கங்களிலுள்ள ஜீவகோடிகளுடைய அபிவிருத்தியின் நிமித்தமாய் அவர் செய்யவேண்டியதைக் காட்டிலும் அதிக கஷ்டமான காரியத்தைச் செய்யவேண்டியிருக்கிறது. கீழ்வர்க்கங்களிலுள்ள ஜீவகோடிகளின்பேரில் விதியானது சுமத்தப்பட்டிருக்கிறது. அந்த விதியை அவைகள் கட்டாயமாய் அநுஸரித்தே தீரவேண்டும். (The Law is imposed) கநிஜ வர்க்கத்திலுள்ள ஜீவன்களின் பேரில் (Mineral Kingdom) விதியானது சுமத்தப்பட்டிருக்கிறது. அவருடைய ஆக்ஞைக்கும் இச்சைக்கும் விரோதமாய் அவைகள் நடப்பதற்கு அவைகளுக்கு யாதொரு ஸ்வதந்த்ரமுமில்லை. யந்திரம் மாதிரி விதிப்படியே கொஞ்சங்கூடத் தவறாமல் அவைகள் நடக்கின்றன. தங்களுக்காகவே ஸ்வேச்சை (Freewill) யொன்றுமில்லை. செடிகொடி வர்க்கத்திலும் அப்படியே. ஒவ்வொரு செடியும் விதிப்படியே வரிசையாய் வளர்கின்றது. தனக்காக யாதொரு இச்சையும் அதற்கில்லை. மிருகவர்க்கத்திலும், உத்தமமான மிருகங்கள் விஷயத்தில் தவிர மற்ற மிருகங்கள் பலவும், விதிப்படியே யாதொரு ஸ்வாதந்தர்யமுமில்லாமலே நடக்கின்றன. தெருவில் செல்லுகின்ற வண்டிச்சக்கரமானது உருளும்பொழுது, அதன் கட்டையில் ஏதாவது பூச்சி உட்கார்ந்திருக்க நேரும்பக்ஷத்தில், சக்கரம் போகிற இடங்களுக்கெல்லாம் பூச்சிக்கு யாதொரு அபாயமுமின்றி அழைத்துக்கொண்டுபோகக்கூடும். ஏனென்றால் சக்கரம் உருளுவதற்கு யாதொருதடையும் அந்தப் பூச்சியானது உண்டாக்குவதில்லை. ஆனால் அந்த பூச்சியானது சக்கரம் உருளுகிறதாவில் வரும் பக்ஷத்தில், சக்கரம் உருளுவதற்கு தடையாயிருந்துகொண்டு அதை எதிர்க்கும்பக்ஷத்தில், அந்தப்பூச்சியானது நசுக்கப்படுகிறது.

இதே மாதிரிதான் கீழ்மூன்று வர்க்கங்களிலும் தர்மசக்கரமானது நடைபெறுகின்றது. ஆனால் மனிதன் விஷயத்திலோ, அப்படியல்ல. ஏனென்றால் மனிதனிடத்தில் ஈசுவரனானவர் தன்னுடைய பிரதிபிம்பத்தை வைக்கிறார். கீழ்வர்க்கங்களில் இந்தமாதிரியில்லை. ஜீவன்களுடைய விகாசம் மேன்மேலும் நடைபெற நடைபெற, அவைகளுடைய அந்தர்கதமான சக்திகள் ஒவ்வொன்றாய் வெளிப்படுகின்றன. அவைகள் மனிதவர்க்கத்திற்கு வரவே, அவைகளுக்கு பாரதந்த்ரம்போய், ஸ்வாதந்தர்யம் வருகின்றது. இச்சாசக்தியானது மனித ஜீவனுக்கு வருகின்றது. மனித ஆத்மாவிடத்துள்ள இச்சாசக்தியானது, ஆத்மாவானவன் எந்த உபாதிகளைக் கீழ்லோகங்களில் வ்யவஹாரம் பண்ணுவதற்காக எடுத்துக்கொண்டிருக்கிறானோ, அந்த உபாதிகளிடத்திலும் பரவுகின்றது. அது உபாதிகளின் வழியாக வெளிப்படுகின்றது. தன்னுடைய ஸ்வபாவத்தில் கொஞ்சம் அவைகள் ஒவ்வொன்றுக்கும் கொடுக்கிறது. ஒவ்வொரு உபாதியும் ஆத்மாவின் இச்சாசக்தியினுடைய ஓர் பிரதிபிம்பத்தை தனக்குத்தானே ஏற்படுத்திக்கொள்ள ஆரம்பிக்கிறது. ஸ்தூல தேகமானது 'நான்தான் ஆத்மா' என்று சொல்லிக்கொண்டு ஒருபக்கம் போகவேண்டுமென்கிறது. காமக்குரோதங்களுக்கு உற்பத்திஸ்தானமாகிய ஷை காம தேகம் (Astral body) 'நான்தான் ஆத்மா' வென்று சொல்லிக்கொண்டு, மற்றொரு பக்கம் போகவேண்டுமென்கிறது. மனஸானது 'நான்தான் ஆத்மா' வென்று சொல்லிக்கொண்டு, மற்றொரு பக்கம்போகவேண்டுமென்கிறது. இவைகள் போகிற வழிகளெல்லாம் ஆத்மாவானவன் போகவேண்டுமென்கிறதில்லை. இவைகளெல்லாம் மனிதனுடைய மாயாரூபமான இச்சைகள் (Illusory Wills) மனிதனுடைய வாஸ்தவமான இச்சை யெது வென்றும் தேகங்கள் தங்களுக்குத்தாங்களே ஏற்படுத்திக்கொண்ட மாயாரூபமான இச்சைகள் எவையென்றும் அறிவதற்கு ஓர் உறைகல் உண்டு (Touch stone). தேகங்களின் மாயாரூபமான இச்சைகள் வெளிவிஷயங்களைப்பின்தொடரும். அவைகள் வெளிவிஷயங்களால் மயக்கத்தை யடைகின்றன. அவைகள் வெளிவிஷயங்களின் ஆடம்பரத்தால் தூண்டப்படுகின்றன. மனிதனுடைய ஸ்தூலதேகமானது ஒருவிதமாக, ஓர் குறிப்பான வழியில் நகரவேண்டுமென்கிறது. ஏனென்றால் ஏதோ ஒன்று அதற்கு விருப்

பத்தை உண்டாக்குகிறது. மற்றொன்று அதற்கு வெறுப்பை உண்டாக்குகிறது. அது தான் விரும்புகிற வழியில் நகரவேண்டுமென்கிறது. அதற்கு ஸுகமாயிருக்கிறவழியில் நடக்கவேண்டுமென்கிறது. அதற்கு வெறுப்பை உண்டாக்குகிறவிஷயத்திலிருந்து தன்னைத்திருப்பிக்கொள்ள வேண்டுமென்கிறது; அதிலிருந்து தன்னை நீக்கிக்கொள்ளவேண்டுமென்கிறது. தேகத்தின் அப்படிப்பட்ட சலனமானது வெளிவிஷயங்களால் தூண்டப்பட்ட சலனமே. ஆத்மாவால் தூண்டப்பட்ட சலனமன்று. (Activity stimulated by external objects not by Inner Atma) இதேமாதிரியே காமக்குரோதங்கள்—ஆசைகள்—முதலியவைகள் விஷயத்திலும் வெளிவிஷயங்களால் தூண்டப்பட்டு ஆசைகளானவை அங்குமிங்கும் இழுக்கப்படுகின்றன. இந்திரியங்களானவை இந்திரிய விஷயங்களில் செல்லுகின்றன.

இன்னும் வரும்.

கே கோடீசுவர ஐயர்.

நன்மொழி.

அவனன்றி யோரணுவு மசையாதெனும்பெரிய
வாப்தர்மொழி யொன்றுகண்டால்
அறிவாவதேதுசில வறியாமை யேதிவ்வை
யறிந்தார்க ளறியார்களார்
மௌனமொ டிருந்ததா ரென்போ லுடம்பெலாம்
வாயாய்ப் பிதற்றுமவரார்
மனதெனவு மொருமாயை யெங்கே யிருந்துவரும்
வன்மையொ டிரக்கமெங்கே
புவனம் படைப்பதென் கர்த்தவிய மெவ்விடம்
பூதபே தங்களெவிடம்
பொய்மெயித மகிதமேல் வருநன்மை தீமையொடு
பொறைபொறு மையுமெவ்விடம்
எவர்சிறிய ரெவர்பெரிய ரெவருறவ ரெவர்பகைஞர்
யாதுமுனை யன்றியுண்டோ
இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்குநிறை கின்றபொருளே.

சிறுவர்க்குரிய விஷயம்.

ஸ்வர்ணமணிகளுக்குக் கடிதம்.

அன்புள்ள ஸ்வர்ண மணிகளே!

முன் இரண்டு மாதங்களில் உங்களுக் கெழுதிய கடிதங்களில், நீங்கள் படித்த பிரகாரம் நடக்க வேண்டியது மிகவும் அவசிய மென்று எழுதியிருக்கிறேன். நீங்கள் அவ்விதம் செய்யாவிட்டால் உங்கள் படிப்பு வீணுகும். நம்முடைய சங்கத்தின் விசேஷ லக்ஷ ணம் அன்பு தான். அக்குணத்தை நாம் ஒவ்வொருவரும் நன்ருய் அப்யஸிக்க வேண்டும். அதைப் பற்றி அப்போதுதான் நாம் நன் ருய் அறிந்து கொள்ளக் கூடும். ஏனென்ருல், சர்க்கரை என்று காகி தத்தில் எழுதிப் படித்துக் கொண்டே யிருந்தால் தித்திக்குமா? நாவில் சர்க்கரையைப் போட்டுப் பார்த்தா லல்லவோ சர்க்கரையின் தித்திப்பு உங்களுக்குத் தெரியவரும்?

ஒரு கட்டிடம் கட்டுவதற்கு முன், கருங்கல்லினுல் உறுதியான அஸ்திவாரம் எழுப்புகிருர்களல்லவா? அதே மாதிரி நம் ஸங்கத்தி ற்கு அன்பு தான் அஸ்திவாரம் என்றறியுங்கள். அஸ்திவாரம் உறு தியாய் இல்லாவிடில் மேல் கட்டிடம் பிளவுபட்டுக் கீழே விழுந்து போம். ஆகையால் இக்கடிதத்தில் அன்பைப் பற்றிச் சிறிது சொல் வேன்.

உங்களில் அநேகர் காந்தம் பார்த்திருப்பீர்கள், அதன் அதிச யம் ஒன்றுண்டு. அது உங்களுக்குத் தெரியுமா? அதன் அருகே ஓர் இருப்பு ஊசியை நீட்டுமுன் அதைப் பிடித்திழுத்துக் கொள்கி றது. காந்தத்திற்கு இருப்புச் சாமான்களைப் பிடித்திழுக்கும் சக்தி உண்டு. அதே மாதிரி அன்பும் ஓர் வித சக்தி.

நாம் அன்புடையவர்களா யிருந்தால் நம்மிடம் ஜனங்கள் அநே கர் பிரியத்துடன் சமீபிக்கிருர்கள். பிறரை வசப்படுத்தும் சக்தி நமக்கேற்படுகிறது. காந்தத்தைப் போலவே, அன்பினுல் நாம் பல முள்ளவர்களாகிறோம். நமக்கு எதிரிகளாயிருந்த போதிலும் அவ ர்களிடத்து அன்பு இடைவிடாமற் செலுத்தி வந்தோமானுல், அவ ர்களுடைய விரோதம் நம்மிடத்தில் வரவரக் குறையும். விரோதம்

விரோதத்தினாலே தணிக்கப்படமாட்டாது. ஆனால் அன்பினால் தான் தணிக்கப்படும் என்று புத்த பகவான் சொல்லியிருக்கிறார்.

இவ்வன்பானது ஒவ்வொருவரிடத்திலும் சொற்பமாக மட்டும் உள்ளது. அதை அவரவர் விருத்தி செய்து கொள்ளவேண்டும். ஒரு சிறு நெருப்புப் பொறியாயிருந்தாலும், அதை ஊதி ஊதித் தட்டான் விருத்தி பண்ணி ஜ்வாலையாக்குகிறானல்லவா? நம்மிடமுள்ள அன்பின் பொறியையும் அவ்விதம் விருத்தி பண்ணலாம். அப்படி அதிகரிக்கச் செய்வதால் நமக்கு சக்தி அதிகமாகின்றது. அப்போது அநேகருக்கு நாம் உபகாரம் செய்யக்கூடும்.

நாம் இப்போது அன்பை எப்படிச் சேகரித்தல் கூடும் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். இக்கேள்விக்குச் சமாதானம் மிக ஆச்சரியமா யிருக்கும். அதாவது:—அன்பைச் செலவிடுவதனாலேயேதான் சேகரிப்பதும் ஸாத்தியமாகும். நாம் நம்முடைய சிநேகிதர்களிடத்து அன்பைச் செலவிட்டால், அவர்களும், அவர்கள்கூட விருப்பவர்களும் முகமலர்ச்சி யுள்ளவர்களாகிறார்கள். பிறகு அவர்களுடன் சேருகிறவர்களும் ஸந்தோஷமுள்ளவர்க ளாகிறார்கள் இவ்விதம் அன்பு பெருகிக் கொண்டே போகிறது. நாம் அன்பைச் செலவிடுகிறபடியால் அநேகர் சந்துஷ்டி பெறுகிறார்கள். மற்றவர்களும் நம்மிடம் அன்பு பாராட்டுகிறார்கள்.

அநேகர் எப்போது சந்துஷ்டி பெறுகிறார்களோ, அப்போது அநேகருடைய மனதைக் கவருகின்ற சக்தி நமக்குள்ளது என்று ஏற்படவில்லையா? அநேகரிடத்தில் அன்பைச் செலவிட்டபடியால் நமக்கு மேன் மேலும் வசிய சக்தி அதிக மேற்பட்ட தல்லவா?

ஒரு பெட்டி நிறையப் பணம் உங்களுக்குக் கொடுத்திருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்தப் பணத்தைச் செலவிடச் செலவிட பெட்டியில் பணம் விருத்தியாகு மென்றும் வைத்துக் கொள்ளுங்கள். அப்போது எவ்வளவு உற்சாகமாய்ப் பணத்தை தாராளமாய்ச் செலவு செய்வீர்கள்!

அன்பு ஞானத்தைப் போலவே, செலவு செய்யச் செய்ய விருத்தியாகக்கூடிய தனம். இதைத் தான் குறைவிலா நிறைவு என்று ஒரு பெரியவர் பாடியிருக்கிறார். நம்மால் ஆனமட்டும் செலவழித்துக் குறைக்கப் பிரயாசைப்பட்டாலும், குறையாமல் நிறைந்துகொண்டே யிருக்கக் கூடியது அன்பு.

அன்பு ஈசுவரனிடத்தில் செலுத்தப்படுதற்கு ஈசுவர பக்தி என்று பெயர். அன்பு தேசத்தினிடத்துச் செலுத்தப்படுவதற்கு தேசாபிமானம் என்று பெயர். அன்பு இராஜாவினிடத்துச் செலுத்தப்படுவதற்கு இராஜபக்தி யென்று பெயர்.

ஈசுவரன் கோவிலில் மட்டுமிருக்கிறு ரென்று நினைத்துச் சிலர் கோவிலில் மட்டும். அன்புடன் ஸ்தோத்ரங்களைச் செய்து பிறகு கோவிலுக்கு வெளியே அன்பை மறந்து விடுகிறார்கள். "ஈசுவரன் எங்கும் எப்போதும் இருக்கிறார்" என்று உணர்வோமானால், நாம் எக்காலத்தும் அன்புள்ளவர்களா யிருப்போம். நமக்கு ஈசுவர பக்தி ஒன்று இருக்குமானால், எல்லாரிடத்திலும் நமக்கு அன்பு உண்டாகும். ஏனெனில், ஈசுவரனில்லாத இடம் கிடையாது. அவருக்கு ஸர்வவியாபி என்று பெயர்.

உலகத்தில் மனிதர்கள் பற்பலர், அன்பை ஒருவரைவிட மற்றொருவர் அதிகமாக விருத்தி செய்திருக்கிறவர்கள் இருக்கின்றார்கள். அவர்களைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்வோம்.

குழந்தைகட்குத் தம்மிடத்தில் மட்டுந் தான் அன்பு நிஜமாக உள்ளதே யொழியப் பிறரிடத்தில் அன்பு வெகு சொற்பந் தான். உதாரணமாக ஒரு குழந்தைக்குத் தின்பண்டம் ஒன்று கொடுத்து விட்டுப் பிறகு அதையே கொஞ்சம் திரும்பக் கேட்டால், நமக்குக் கொஞ்சமேனும் கிடைக்கிறதில்லை. குழந்தைகட்குப் பிறரிடமிருந்து பெற்றுக்கொள்வது தான் ஸம்மதமே யொழிய பிறருக்குக் கொடுப்பதில் பிரிய மில்லை. பிறகு வயது ஆகி விவரம் தெரியத் தெரியத் தனக்கு ஸமமான வயதுள்ள பள்ளிக்கூடப்பையன்களிடம் ஸ்நேகம் பாராட்டியும், பிறகு தனக்கு வயதில் மூத்தவர்களான உபாத்தியாயர், தாயார், தகப்பனார் இவர்களிடம் விசுவாஸம் வைத்து, பிறகு தானே குழந்தைகளைப் பெற்றவுடன், தனக்கு வயதில் சிறியவர்களிடத்தில் பிரியம் வைத்தும் நடை பெறுகிறார்கள்.

உங்களிடத்தில் உங்கள் தகப்பனாருக்கு உள்ள அன்பைப் பாருங்கள். தினமும் வீட்டை விட்டு வெளியே போய், ஏதாவது வேலையைச் செய்து, பணம் சம்பாதிக்கிறார்கள். அதனால் உங்களுக்கு உணவும் (சாப்பாடும்) உடையும் (உடுப்பும்) கிடைக்கின்றன. உங்களைப் பள்ளிக்கூடத்தில் படிக்க வைக்கிறார்கள். உங்கள் பெற்றோரைப்போல் உள்ள பெரியவர்கள் ஒவ்வொருவரும் ஒரு குடும்பத்தை ரக்ஷிக்கிறார்கள், குடும்பத்தில் மிக அன்பு பாராட்டுகிறார்கள்.

இன்னும் சிலர் தம் சொந்தக் குடும்பங்களுக்காக உழைப்பதைப்போலவே, ஏழைகளாயுள்ள தம் பந்துக்களின் குடும்பங்களையும் காப்பாற்றுகிறார்கள். அவர்களுடைய க்ஷேமத்தையும் தம்முடையதைப் போலவே கவனித்து வருகிறார்கள். இவ்வூரில் காலஞ்சென்ற ப. நாராயண ஐயரவர்கள் இம்மதுரை ஜில்லா முழுமைக்குமே, மிக அன்புள்ளவராயிருந்து, அநேக நன்மையான காரியங்கள் செய்திருக்கின்றார். அவர்கள் மாதிரியே நம் இந்தியா தேச முழுமைக்கும், பொது ஜனங்களின் நன்மையைக் கருதி, உழைத்து வருபவர்களில் ஸ்ரீமான் ஆனரபில் கோபாலகிருஷ்ண கோகலே; ஸ்ரீமான் எம். கே. கந்தி இவர்கள் முதன்மையானவர்கள். இன்னொரு விஷயம்:

இப்போது ஐரோப்பாவில் யுத்தம் நடப்பதைப்பற்றி நீங்கள் எல்லோரும் கேள்விப்பட்டிருப்பீர்கள். நம் தேசத்தைச், சத்துருக்கள் வந்து கைப்பற்றிக்கொண்டு நம்மை ஹிம்ஸிக்காமல், நமது மாட்சிமை தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியவர்கள் காப்பாற்றி வருகிறார். நம்மிடத்தில் நமது சக்ரவர்த்தியவர்களுக்கு அன்பு எவ்வளவு பார்த்தீர்களா? இது மிகப் பெரிய அன்பன்றோ? ஆகையால் நாம் இராஜபக்தி யுள்ளவர்களாய், நம்முடைய சக்ரவர்த்தியவர்கள் ஜயம் பெறவேண்டுமென்று ஈசுவரனைப் பிரார்த்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஸ்வர்ணமணிமாலைச் சங்கத்தின் லக்ஷ்யங்களை எழுதிய ஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையவர்கள் நம் இந்தியாவின் க்ஷேமத்திற்கே தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்வதோடும், உலக முழுமையினுடைய க்ஷேமத்திற்கும் உழைத்தும் வருகிறார். அவர்களின் அன்புதான் என்ன!

இன்னும் இவர்கள் எல்லோரையும் காட்டிலும் அதிக அன்பு மேலிட்டவர்களாயும், அதனால் பூலோகத்தைப்போலவே அநேக லோகங்களுக்கு உபகரிக்கக் கூடியவர்களாயும் அநேகர் இருக்கிறார்கள். அவர்களைத்தான் இருஷிகள் அல்லது மஹான்கள் என்று சொல்வோம்.

இவர்கள் எல்லாருக்கும் மேலான அன்பு உள்ளவர் ஒருவருண்டு, அவரைத்தான் "அன்பே சிவம்" என்று திருமூலநாயனார் துதிக்கிறார். சிவம் என்பதற்கு கடவுள் என்றருத்தம்.

வஸந்தாநந்தர்.

310

பத்திரிகை வரவு

வித்தியாபாநு:— இது சென்ற ஆறு வருஷங்களாக ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகையாக நடைபெற்று வந்தது. மகா-ள-ள-ஸ்ரீ ம. கோபால கிருஷ்ண ஐயரவர்கள் மகா-ள-ள-ஸ்ரீ மு. ரா. கந்தசாமிக் கவிராயரவர்கள் இவ் விருவரும் அதன் பத்திராதிபர்கள். அப்பத்திரிகையைப் படிப்பவர்கள் கல்வியறிவிலும் நல்லொழுக்கத்திலும் மேன்மேலும் அபிவிருத்தியடை யவேண்டுமென்ற கோரிக்கையுடன் திரவியலாபத்தைக் கருதாமல் அந்தப் பத்திரிகையை இப்போது வாரம் இருமுறை பிரதி திங்கள் வியாழக்கிழமைகள் தோறும் பிரசுரம் செய்துவருகிறார்கள். அதில் கசடற்ற கல்வியைப் புகட்டத் தக்க, அருமையான விஷயங்கள் இனிய தமிழில் தக்க வித்வான்களால் எழுதப்பெறுகின்றன. இதன் வருஷசந்தா ரூ 6-தான். தமிழறிவோர்கள் யாவரும் அந்தப் பத்திரிகையை வரவழைத்துப் படித்து நன்மையடைவார்களென்று நம்புகிறோம். இப்பத்திரிகையே மதுரையிலுள்ள தமிழ் வித்வான்களுடைய கோஷ்டியின் அபிப்பிராயத்தை வெளியிடுகின்ற தென்னலாம். வேண்டுவோர், மதுரை, வித்தியாபாநுப் பத்திராதிபர் மகா-ள-ள-ஸ்ரீ மு. ரா. கந்தசாமிக் கவிராயரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

புத்தக வரவு.

மாலினீ மாதவம்:— இக்கதையானது மகா-ள-ளஸ்ரீ R. S. நாராயண சாமி ஐயர்BA., BL அவர்களால் இயற்றப்பட்டது. இதற்குமுன் அவர்களால் வெளியிடப்பட்டுள்ள, கலியாணி, வஸந்தமாளிகை, மாண்டவன் மீண்டமாயம் என்னும் கதைகளைப்போல, இந்தக் கதையும் சிறுவர்கள் ஸ்திரீகள் முதலாக, ஸாதாரணமாக யாரும் சுலபமாய்ப் படித்து அறியும்படியான இனிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருப்பதுமல்லாமல் ஒருமுறை படிக்க ஆரம்பித்தவர்கள் இதைப் படித்து முடித்துத்தான் வேறு வேலை பார்க்கவேண்டுமென்று ஆவல் கொள்ளும்படியான அவ்வளவு ரம்மியமான கதா நிகழ்ச்சியுடனும், உலகின் இயல்பை உள்ளபடி விளக்கிக்காட்டும்படியான அனேக வர்ணனைகளுடனும் கூடி இருக்கிறது. இதை வாங்கிப் படிப்பவர்கள் "தர்மம் தலைகாக்கும்" என்னும் ஆன்றோர் வாக்கியத்தின் உண்மை மாதவனுடைய உதாரணத்தாலும், "கெடுவான் கேடு நினைப்பான்" என்னும் வாக்கியத்தின் உண்மை கிருஷ்ண ராஜனுடைய உதாரணத்தாலும், மனிதன் எவ்வளவுதான் மாற்ற முயன்றாலும் எதுவும் தெய்வஸங்கல்பம்போல் முடியும் என்பது மாலினீ விவாஹத்தாலும் தெளிவாய்த் தெரிவார்கள். இந்தப் புத்தகத்தின் விலை அணா 10-தான். வேண்டுவோர்கள் மதுரை தானப்பமுதலித் தெரு ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயரவர்கள் என்னும் விலாசத்துக்காவது மதுரை விவேகபாநு அச்சாபீஸ் மானேஜருக்காவது எழுதித் தருவித்துக்கொள்ளலாம்.

வித்தியாபிவிருத்திக்காக ஒரு நன்கொடை:—ஸமீபகாலத்தில், பம்பாயில் இருந்து இறந்துபோன பெரோஜ்ஷா மானெக்ஜிகாகா என்ற பார்ஸி வியாபாரி ஒருவர் எழுதிவைத்த உயிலில், பார்ஸி மதத்தைச்சேர்ந்த ஏழைப்பிள்ளைகளின் படிப்பை உத்தேசித்து 6 லக்ஷம் ரூபாய் நன்கொடை அளித்திருப்பதாகத் தெரியவருகிறது. விசேஷமான பொருளுதவி செய்யத்தகுந்த சக்தியும், வித்தியாபிமானமும், நன்கொடையளிக்க மனமும், பொருந்தி அவர்போல அனேகர் நம் நாட்டில் உண்டாகும்படி இறைவன் அருளல்வேண்டும்.

திருப்பதி தேவஸ்தானமும் வித்தியா தர்ம பரிபாலனமும்:—பெரும்பான்மையோர் எழுதப்படிக்கக்கூடத் தெரியாத நம்முடைய தேசத்தில், கல்வி பரவச்செய்ய அளவற்ற திரவிய ஸகாயம் தேவையாயிருக்கிறது. தென் இந்தியாவில் லக்ஷக்கணக்காக வருஷ வரும்படியுள்ள பெரிய தேவஸ்தானங்கள் அனேகம் இருக்கின்றன. திருப்பதி தேவஸ்தானத்தின் மிகுதி வரும்படியிலிருந்து திருப்பதியில் ஒரு ஹைஸ்கூலும், வேலூரில் ஒரு ஹைஸ்கூலும், திருப்பதியில் ஒரு ஸம்ஸ்கிருத காலேஜும் நடத்திவந்தார்கள். தேவஸ்தானத்தின் வரும்படியை வேறுவிதமான தர்மங்களுக்கு உபயோகப்படுத்த தர்ம கர்த்தாவுக்கு அதிகாரமில்லை என்று ஒரு ஹைக்கோர்ட்டு தீர்ப்புப் பிறந்ததின் பேரில் அந்த ஸ்கூல்களை நடத்த வேறுமார்க்கமில்லாமல் அவைகள் தத்தளித்துக்கொண்டிருந்தன. திருப்பதி தேவஸ்தானத்தின் மிகுதி வரும்படியிலிருந்து அந்த ஸ்கூல்களைப் பரிபாலனம் செய்து நடத்த அதிகார முண்டென்று ஸ்தாபிப்பதற்காக மகா-௱-௱-ஸ்ரீ டி. வி. சேஷகிரி ஐயரவர்கள் மதராஸ் சட்ட நிர்மாண ஸபையில் ஒரு மசோதாச் சட்டம் கொண்டுவந்தார்கள். இப்பால் அவர்கள் ஹைக்கோர்ட்டு ஜட்ஜ் ஆய்விட்டதின் பேரில், மகா-௱-௱-ஸ்ரீ வி. எஸ். ஸ்ரீனிவாஸ சாஸ்திரிகளவர்கள் அந்த விஷயத்தை ஆதரித்துப்பேசி, அந்தப்படி சட்டம் ஏற்பட்டுவிட்டது. அதுபோல மற்ற தேவஸ்தானங்களிலும் இயன்றமட்டும் பொருளுதவி செய்து ஏன் வித்தியாதர்ம பரிபாலனம் செய்யக்கூடாது?

படிக்கும் சிறுவர்களின் சரீர சௌக்கிய ஆராய்ச்சி:—பள்ளிக்கூடங்களில் படிக்கும் சிறு பிள்ளைகளுடையவும் பெண்களுடையவும் தேகசௌக்கியத்தின் நிலைமையைத் தகுந்த டாக்டர்களைக் கொண்டு சோதித்துப் பார்த்து குறைகளைத் தெரிந்து அவைகளை விலக்க வழிதேடவேண்டியது அவசியம்என்பதைப் பற்றி பிரஹ்மக்ஞான சபையின் அங்கத்தினர்களில் ஒருவராகிய டாக்டர் ஹேடன் கெஸ்ட் என்பவர், பல வியாஸங்கள் எழுதியிருக்கிறார்கள். அந்தப்படி சென்னை இராஜதானியில் உள்ள பள்ளிக்கூடங்களில், ஒரு I. M. S. பரீக்ஷை தேறின டாக்டரைக்கொண்டு சோதனை செய்யும்படி நம்முடைய மதராஸ் கவர்ன்மெண்டாரவர்கள் உத்தரவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது. அவ்விதமான சோதனையால் நன்மை உண்டாகும் என்பதில் சந்தேகமில்லை.

ஆஜ்மீரில் ஸாவித்திரி பாடசாலை:—ஆஜ்மீர் நகரத்திலுள்ள கவர்ன்மெண்டு காலேஜில் ப்ரொபெஸராக இருக்கும் லால்ஜி ஸ்ரீவாஸ்தவருடைய பத்நி கல்வியிற் சிறந்தவர்கள். பெண்களின் உயர்ந்த படிப்புக்குத் தேவையான உபாத்தியாயர்களும் சௌகரியங்களும் இல்லாமையை உத்தேசித்துச் சென்ற பிப்ரவரி மீ" த்தில் "ஸாவித்திரி பாடசாலை" என்னும் ஒரு பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்து,அதைத் தன் வீட்டிலேயே வைத்து நடத்தி வருவதும் அல்லாமல், இங்கிலீஷ் முதலான முக்கியமான பாடங்களை அவர்களே கற்பித்து வருகிறார்களாம். இப்போது அந்தப்பள்ளிக்கூடத்தில் 68 ஸ்திரீகள் படிக்கிறார்களாம். ஸ்திரீகளுக்கு அவசியமானகைத்தொழில்களும்கற்பிக்கப்பட்டுவருகின்றனவாம். தவிரவும், அந்தப்பட்டணத்திலுள்ள ஸ்ரீமதிகளை ஒரு ஸங்கமாகச் சேர்த்து, வாரத்துக்கு ஒரு முறை கூட்டம்கூட்டி, அவர்களுக்கு அவசியமான விஷயங்களைப்பற்றி உபந்யாஸங்கள் மூலமாய் கற்பிக்கிறார்களாம்.

குருடர்களைப் படிப்பிக்க ஒரு புதிய உபாயம்:—இதுவரை குருடர்களை எப்படிப் படிப்பித்தார்களென்றால், அவர்கள்கையால் தடவிப்படிக்கும்படியாகப் புஸ்தகங்களில் எழுத்துக்களைப் பெரிதாயும் எடுப்பாயும் அச்சிட்டுப்படிப்பித்தார்கள். இப்போது டாக்டர் E. E. Fouknier D. Albe என்பவர் ஒரு புதிய யந்திரம் கண்டுபிடித்திருக்கிறாராம். அந்த யந்திரத்திலிருந்து ஒரு வெளிச்சம் படிக்கவேண்டிய எழுத்துக்களின் பேரில் வரிசையாய் விழுந்துகொண்டே வரும்படி அமைக்கப்பட்டிருக்கிறதாம். வெளிச்சம் விழும்போது எழுத்துக்களுக்குத் தக்கபடி வெவ்வேறாக சப்தமுண்டாகிறதாம். அந்தச் சப்தங்களைக் கேட்டுக் குருடர்கள் எழுத்துக்களைத் தெரிந்து, சுலபமாகவும் வேகமாகவும் படிக்க ஸாத்தியமாகிறதாம். அந்த யந்திரத்தை Royal Society என்னும் ஸங்கத்தார் முன்பாக அந்த டாக்டர் அவர்கள்கொண்டுவந்து பிரத்தியக்ஷமாக நிரூபணம் செய்து காட்டினார்களாம்.

பம்பாயில் தாழ்ந்த ஜாதியாருக்குப் புஸ்தகசாலைகள்:— பம்பாயில் Social Service League என்னும் பரோபகார சங்கத்தார், அதிகப் படிப்பில்லாத தாழ்ந்த ஜாதியார்களின் பிரயோஜனத்துக்காகச் சிலபுஸ்தக சாலைகளை ஏற்படுத்தி, அதிலுள்ள புஸ்தகங்களை அவர்களுக்குக் கொண்டுபோய்க் கொடுத்து, அவர்களைப் படிக்கும்படி செய்து, அவர்கள் படித்தானதின் பேரில், அதில் கண்ட விஷயங்கள் அவர்களுக்குத் தெளிவாகத் தெரியும் பொருட்டு, அந்தஸங்கத்தைச்சேர்ந்த மெம்பர்கள், நேரில் அந்த விஷயங்களைப்பற்றி உபந்யாஸங்கள் செய்வதும் தவிர, Magic Lantern என்னும் புகைப்படக் காட்சி மூலமாய் அவர்களுக்குக் காட்டியும், கல்வியைச் சிறுகச் சிறுகப் புகட்டுகிறார்களாம்.

சென்னையில் தாமோதர் பஞ்சமஸ்கூல்:—பிரஹ்மஞான ஸபையின் பிரெஸிடெண்டாக இருந்து காலம் சென்ற ஸ்ரீமான் கர்னல் ஆல்காட் அவர்

கள், பஞ்சமர்களைப் படிப்பிக்கும் விஷயத்தில் விசேஷமான முயற்சி எடுத்துக் கொண்டு சென்னையில் சில பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்தார்கள். அப்படி பள்ளிக்கூடங்கள் பல வருஷங்களாக மிகவும் சிறப்பாய் நடத்தப்பட்டு வருகின்றன. அவைகளில் ஒன்றான "தாமோதர் ஸ்கூல்" என்ற பள்ளிக்கூடத்துக்கு மதறாஸ் முனிஸிபாலிடியார் புதிதாய் ஒரு ஹால் கட்டிக்கொடுத்தார்கள். அதைச் சென்ற மீ த்தில் மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மாளவர்கள் ஒப்புக் கொண்டு கிருஹப்பிரவேச மஹோத்ஸவம் நடத்தினார்கள்.

இந்தியர்களுக்குக் கப்பல் ஓட்டும் தொழிலைக் கற்பிக்க ஒரு முயற்சி:— பம்பாயிலுள்ள மகமது யூஸப் இஸ்மெயில் என்பவர், தன்னுடைய சொந்தச் செலவில் கப்பல்கள் வாங்கி, எந்த ஜாதி அல்லது மதத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் சரி, எல்லா இந்தியர்களுக்கும், கப்பலோட்டும் தொழிலைக் கற்றுக் கொடுக்கத் தயாராயிருப்பதாக, பம்பாய் கவர்ன்மெண்டாரவர்கள் பிரசித்தம் செய்திருக்கிறார்கள். இது தவிர, ஏற்கனவே அந்தப்பிரபு, மூன்று பள்ளிக்கூடங்களையும் தாய் தந்தையர்கள் அற்ற குழந்தைகளைக் காப்பாற்ற ஒரு Orphanage சாலையையும், ஏற்படுத்தி நடத்திக்கொண்டு வருவதாகவும் தெரிய வருகிறது.

ருதுவானபின் விவாஹம்:— நம்முடைய சில ஸ்மிருதிகளினாலும் கிருஹிய சூத்திரத்தினாலும் ருதுவான பின் விவாஹம் செய்வது நிஷித்தம் அல்லவென்று தெரிந்தாலும் கூட, இன்னும் சில ஸ்மிருதிகளை அனுஸரித்து, சில ஜாதியார்களுக்குள் பெண்களை ருதுவாகுமுன் விவாஹம் செய்து கொடாவிட்டால், அவர்களும் அவர்களைச் சேர்ந்தவர்களும் ஜாதிப்பிரஷ்டர்களாய் விடுகிறார்கள் என்ற ஒரு கொள்கை யிருப்பதனால், பால்ய விவாஹம் அவசியமாய் ஏற்பட்டு, வெகு காலமாய் நடந்து வருகிறது. பிள்ளைகளுக்கும் அவ்விதமான நிர்ப்பந்தம் இல்லாததினாலே, வரசுல்கம் கொடுக்கிறதென்ற ஒரு கொடிய வழக்கம் உண்டாயிற்று. பங்காளத்தில் வரசுல்கம் கொடுத்து விவாஹம் செய்து வைக்கச் சக்தியற்ற சில ஏழைகளின் பெண்கள், தங்கள் நிமித்தம் தாய் தந்தையர்கள் கஷ்டப்படாதபடி, விஷத்தைத் தின்றும் தீமூட்டிக் கொண்டும் உயிரை விட்டார்கள். தவிரவும் பெண்கள் ருதுவான பின் செய்யும் விவாஹம் சட்டப்படி செல்லாதென்றும், அவர்களிடத்தில் உண்டாகும் ஸந்ததிகள் சட்டப்படி சொத்துக்களை அடையக்கூடிய பாத்தியஸ்தர்கள் ஆகமாட்டார்கள் என்றும், சிலருடைய கருத்து. அதுவும் பால்ய விவாஹத்துக்கு ஒரு முக்கியமான காரணம். அந்தக் காரணத்தையாவது விலக்கினால் ஒருவாறு பால்ய விவாஹம் குறையும் என்னும் நோக்கத்துடன் கனம் மகா-ள-ள-ஸ்ரீ வி.எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் அவ்விதமான விவாஹங்கள் செல்லத் தக்கது என்று ஏற்பாடு செய்வதற்காக, மதறாஸ் சட்ட நிர்மாண சபையில் ஒரு மசோதாச் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள்.

வேசூவியஸ் என்னும் எரி மலைக்குள் பிரவேசம்:—பிரகிருதியின் தத்துவங்களை அறிய, பௌதிக சாஸ்திரிகளின் ஆவலைச் சொல்லி முடியாது. கருங்கற்களைக் குழம்பாக உருக்கிக் கக்கும் எரி மலைகளின் உள் புறத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல்கொண்ட, Professor Alessandro Malladra என்பவர் Italy தேசத்திலுள்ள வெசூவியஸ் என்னும் எரிமலையின் முகத்துவாரத்து வழியே, 1912 ஆு மேமீ த்தில் தைரியமாய் உள்ளே சென்று 1200 அடி ஆழம் வரை கீழே இறங்கிப் பார்த்து வந்தார். அது முதல் அவர் போன்ற அனேகம் வித்துவான்கள் போய்ப்பார்த்து வருகிறார்களாம். கடைசியாய்ப் போய்ப் பார்த்த பர்லிங்காம் என்னும் வித்வான், சினிமோடாகிராப் என்னும் யந்திரங்களைக் கொண்டு படங்கள் பிடித்துக் கொண்டு, லண்டன் முதலான பெரிய பட்டணங்களுக்கு வந்து, நம்மைப் போன்ற ஜனங்களுக்கு அந்தக்காட்சி காட்டுகிறாராம்.

வேலவானந்தன்.

நன்மொழி.

அன்னே யனேயெனுஞ் சிலசமய நின்னையே
ஐயா வையாவென்னவே
அலறிடுஞ் சிலசமய மல்லாது பேய்போல
வலறியே யொன்றுமிலவாய்ப்
பின்னேது மறியாம லொன்றைவிட் டொன்றைப்
பிதற்றிடுஞ் சிலசமயமேல்
பேசரிய வொளியென்றும் வெளியென்று நாதாதி
பிறவுமே நிலயமென்றும்
தன்னே ரிலாதஹோ ரணுவென்று மூவிதத்
தன்மையாங் காலமென்றும்
சாற்றிடுஞ் சிலசமய மிவையாகி வேறதாய்ச்
சதாஞான வானந்தமாய்
என்னையெ னேகருணை விளையாட் டிருந்தவா
றெம்மனோர் புகலவெளிதோ
இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்குநிறை கின்றபொருளே.